3 | 37

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

OFFICE OF THE REGISTRAR

மதுரையில் பிரசுரமாகும்
ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௫. } பிரமாதீச௵ மாசி௴ { பகுதி ௧௧

வித்தியா பாநுவும், வைசிய மித்திரனும்.

16-2-14ல் வெளிவந்த வைசிய மித்திரனில் "நமது பத்திரிகையும், வித்தியாபாநுவும் என்ற பெயரிட்டு அப் பத்திராதிபரவர்கள் எழுதியவற்றைப் பற்றி எமது அபிப்பிராயத்தை வெளியிடுகின்றோம்.

தேவகோட்டை வைசிய சிவாநந்த சபையில் நடந்த விஷயங்களைப்பற்றி நமது நண்பரவர்கள் எழுதிய குறை பாடுகளைப் பரிகரிக்குமுகத்தால் யாம் வரைந்துள்ள விஷயங்களை நண்பர் மறுத்துத் தங் கொள்கையையே நிலை நாட்டுகின்றார்கள்.

(1) ஒரு சங்க வருஷோற்சவம் எத்தனை நாள் நடப்பினும் ஒருவரே தலைமை வகிக்கவேண்டுமென்கின்றார்கள். காங்கிரஸ் போன்ற சில சபை நிகழ்ச்சியைப் பின்பற்ற வேண்டுமெனவும், மதுரைத் "தமிழ்ச்சங்கத்தின் நடபடிக்கை சரியானதுமன்று? அது கொள்ளற்பாலதுமன்று" எனவும் நண்பர் கூறுகிறார். தமிழ்மக்களே அங்கத்தினராகி நிரம்பிய சபையில் தமிழ்ப்பாஷையொன்றே பிரசங்க மொழியாகக் கொண்டு நடத்துமிடத்தில் "தமிழ்ச்சங்க நடபடிக்கை சரியானதன்று, கொள்ளத்தக்கதன்று" என்று கூறிவிட்டு வேறொன்றைக் கூறுதல் எவ்வளவு பொருத்தமானதென்பதை அறிஞரே அறிவர். தமிழ்ச்சங்கமானது தற்காலத்துச் சிறந்த தமிழ் வித்துவான்கள் பலரும் மேற்கொண்டு நடத்தும் சபையாகவும் அதன் நடபடிக்கை சரியான தன்றெனவும் கொள்ளத்தக்க தன்றெனவும் கூறுதல் மிகவும் பொருத்தமற்றதேயாம். அன்றி

யும் "பலர் அக்கிராசனம் வகிப்பின் ஒருவர் ஒருவித முடிவும் மற்றொருவர் ஒருவித முடிவும் செய்ய நேரிடுமே" என்பனவாதியாகச் சில கூறுகின்றார். உபந்யாசங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விஷயங்களைப்பற்றி நிகழ்வதால் முடிவு கூறுதலில் வித்தியாசம் நேரிடக்காரணமில்லை யென்பது யாவரும் ஊகித்துணரத் தக்கதேயாம். ஆதலின் பலர் அக்கிராசனர்களாயமைய ஒரு வருஷோத்ஸவம் நடைபெறலா மென்பதே எமது கருத்து.

(2) விவரணப் பத்திரத்தில் குறித்த உபந்யாசங்களை "எக்காரணம் பற்றியும் மாற்றக்கூடாது" என்று நண்பர்கூறி யிருந்தமையால் சிலவேளை ஏதாவது அசௌகர்யம் ஏற்பட்டு மாற்ற நேரிடுவது தவறாகாது என்று கூறினோம். எக்காரணம் பற்றியும் என்பதற்கு இப்போது நண்பர் பொருள் எழுதுகின்றார்கள். அதாவது தெய்வாதீனமாய் நேரும் நிகழ்ச்சிகளைக் குறித்ததன்று என்பதாம். இந்தப் பொருளை முதலிலேயே நண்பர் எழுதியிருப்பார்களானால் நாம் ஆக்ஷேபித்திருக்க மாட்டோம் என்பதை நண்பரவர்கட்குத் தெரிவிக்கின்றோம். எக்காரணம் பற்றியும் என்ற சொற்றொடர்க்கு இயல்பாக அமைந்த செம்பொருள்கொண்டு யாம் ஆக்ஷேபித்தோம். நண்பர் கருதியதோர் குறிப்புப்பொருள் இப்போது வெளியாய் விட்டதால் இனி ஆக்ஷேபணையில்லை யென்பதும் ஆதலால் ஏதேனும் முக்கிய அசௌகரியமுற்றால் விவரணப்பத்திரத்தில் குறிப்பிட்ட நியதி மாறுதலடைவதில் குற்றமின்றென்பதும், அது நண்பர்க்கும் உடன்பாடேயாவதும் வெளியாம்.

(3) உபந்யாசகர் தாம் உபந்யசிக்கும் விஷயத்திற்கு ஏற்ற அக்கிராசனர்களின் கீழேதான் உபந்யசிக்கவெண்டுமென்பது எமது கருத்து. அக்கிராசனர் யாவராயினும் உபந்யசிப்பவர் தாம் எடுத்த விஷயத்தை யுபந்யசிக்க வேண்டுமென்பது நண்பர் கருத்து. இதற்கு ஏதேதோ சபைகளை நண்பர் காட்டுகின்றார். இவ்விஷயத்தில் நண்பர் கருதியபடி நிகழ்ச்சி கிடையாது. எந்தச் சபைக்கும் அக்கிராசனரைத் தெரிந்தெடுக்கும்போதே உபந்யாச விஷயங்கட்கு ஏற்றவாறு பாரபக்ஷமற்ற பொது நோக்குடையரைத்தான் தெரிந்தெடுப்பது வழக்கம். அதனுண்மையை யுணர்ந்தே உபந்யாசகர் இணங்குவார். யார் அக்கிராசனராயினும் சரி, நான் சொல்வதைத்

கொட்டிவிட்டு வருகிறேன் என்று அறிஞர் ஒருநாளும் உபந்யசிக்கப்போகார். இதுதான் சிறந்த புத்திமான்கள் கொள்கை. வேதாந்தக்கொள்கையுடையார் அக்கிராசனத்தின் கீழ் சித்தாந்த விஷயம் உபந்யசிக்கப்படுமாயின் அக்கிராசனர் எங்ஙனம் ஆமோதித்து முடிவுரை கூறுவார்? என்று யாமெழுதியதற்கு நண்பர் விபரீதார்த்தங்கொண்டு ஏதேதோ வரைகின்றார். உபந்யாசங்களை யெல்லாம் தலைவர் சரியென்றே கூறவேண்டுமென்று யாம் கருதியதாக நண்பர் தப்பபிப்பிராயங்கொள்கின்றார். யாம் அங்ஙனம் கருதவில்லை. சித்தாந்த சாஸ்திர ஆராய்ச்சியுடையவர் முன்பு அவ்விஷயம் உபந்யசிக்கப்பட்டால் தலைவர் அவ்விஷயத்தின் குணதோஷங்களை யெடுத்து விளக்கும் ஆற்றலுடையராவர். சித்தாந்த சாஸ்திர உணர்ச்சியற்றவர் தலைவராயிருப்பின் முடித்துரைக்கும் அறிவாற்றல் பெறப்படுமாறில்லையே. தமிழ்ப்பாஷையே தெரியாதவர் முன்பு தமிழ்ப் பிரசங்கஞ்செய்தால் பயன்படுமா? அக்கிராசனர் உபந்யாசவிஷயத்தின் குணதோஷங்களைக்கண்டு கூறற்கு அவ்விஷயத்தைப் பற்றிக் கூறும் நூல்களிலே பயிற்சியற்றவராயின் நகைப்பிற்கே யிடமாம். ஆகவே உபந்யசிக்கப் புகுமுன்பு தாம் உபந்யசிக்கும் விஷயத்தைப்பற்றிய நூலாராய்ச்சியுடையார் அவைத்தலைவரா என்பதை யுணர்ந்துகொண்டே பிரசங்கிக்க வேண்டுவது அவசியமென்பதே எமது சித்தாந்தம்.

(4) ஸ்ரீ மு. ராகவையங்காரவர்களும், ஸ்ரீ மு. கோவிந்தசாமி ஐயரவர்களும் ஆத்தங்குடி மாணவர்களைப்பற்றிக் குறை கூறவில்லை யென்பதும், நியாயமாக மாணவர்களும் ஆசிரியர்களும் அறிந்து கொள்ளத்தக்க சில விஷயங்களை மட்டும் விளக்கிக் காட்டினர்களென்பதும் நாம் முன்னரே நன்கு விளக்கியிருக்கின்றோம். பத்திரிகை நேயர்கள் தாங்களே ஊன்றியறிந்து கொள்வார்களாக.

இனி இவ்விஷயத்தைப்பற்றி மேலும் மேலும் விபவகரிப்பதில் எமக்கு விருப்பில்லை. நண்பர் கூறிய விஷயங்கள் பொருந்தாவென்பதையும், வைசிய சிவாநந்த சபை நிகழ்ச்சியில் குறைபாடுகளில்லை யென்பதையும் விளக்கினோம். அதை நண்பரவர்கள் மறுக்கின்றார்கள். ஆயின் எம்மிருவர் அபிப்பிராயங்களையும் வெளியிட்டு விட்டேமாதலின் எங்கள் அபிப்பிராயங்களில் தள்ளத்தக்கதிது கொள்ளத்தக்கதிது வென்று அறிவுடையோர் அறிந்துகொள்வாராக.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

பத்திராதிபர்.

"சுவாமி" வேதாசலம் பாராட்டிய விபரீதார்த்தம்.

23—12—13 ல் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையில் சுவாமி வேதாசலம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் சென்னை ஸ்ரீ கிருஷ்ணவேணியம்மாளவர்களால் "பக்தி" என்னும் விஷயம் உபந்யஸிக்கப் பட்டது. அவ்வுபந்யாஸத்தில் அம்மாளவர்கள், 'ஸித்தாந்தம்' 'ஸந்நிதி' என்னுஞ் சொற்களுக்கு முறையே, சித்து—அறிவு; அந்தம்—முடிபு, என்றும், சம்—சுகம்; நிதி—இடம். என்றும் பொருள் கூறினார்கள். இப்பொருள்களைச் சுவாமி வேதாசலம் மிகப் பாராட்டி அம்மாளவர்களுக்குப் பண்டிதைப் பட்டங் கொடுத்தனர். சபையாரும் அங்கீகரித்தனர். சொற்களுக்குப் பொருள் கூறப்புகுங்கால் அச்சொற்க ளின்னபாஷையிலுள்ளன வென்றுணர்ந்து கூறல் வேண்டும். அவ்வுணர்ச்சி யின்றெனினும் பொருள் பொருந்துமேல் நன்றும். இங்ஙன மின்றிப் பொருந்தாப் புதுப் பொருள் கற்பித்தல் விபரீதமே.

இவ்விரு சொற்களும் "ஸித்தாந்தம், ஸந்நிதி" என்னும் வடமொழிகளையாம். இவற்றிற்கு முறையே "முடிந்த முடிபு" என்றும், 'நல்லிடம் அல்லது கடவுளிடம் என்றும் பொருள் கூறுதலே பொருத்தமாம்' சுவாமி வேதாசலம் தமிழ்ச்சொல்லாகக்கொண்டு அம்மாளவர்கள் பொருள் கூறினர்களென்றுஞ் சொன்னர். ஒரு பாஷையிலுள்ள சொற்களை மற்றொரு பாஷைச் சொற்களாகக் கொண்டு பொருள் கூறற்கு இலக்கணம் யாண்டுக்கண்டனரோ? இவர் விபரீதக் கொள்கைப்படி தமிழ்ச் சொற்களாகக் கொள்ளினும் சித்தாந்தம் எப்படிப் பொருந்தும்? சித்து + அந்தம். சித்தந்தம் என்றன்றோ முடிதல் வேண்டும். ஆகாரமாக நீளற்கு விதி யாண்டுளது?

ஸ்ரீ அம்மாளவர்களைப் போன்ற நம் பெண் மக்கள் ஒரோ விடங்களிற் றவறுதல் கூடுமேனும், அதுபற்றி யவர்களைக் குறைகூறல், பெண் கல்வி விருத்திசெய்ய வேண்டுமென்று நம்மனோர் முயலுமிப்பொழுது தக்கதன்று. எல்லா முணர்ந்த தத்துவஞானி யென்று வெளிப்போந்த சுவாமி வேதாசலம் அவர்கள் இப்பொருளைத் திருத்திக் கூறலாம். அறியாரேல் ஒன்றும் பேசாதொழியலாம். இரண்டு மின்றி வலியுறுத்துப் பாராட்டிய தென்னையோ?

சுவாமிகள் ஒருவாறு விதியையுங் கண்டிருக்கலாம். அங்ஙனமாயின் அவர்களாவது அவர்களின் உண்மைப் பத்தர்களாவது மறுமொழி தருவார்களாக.

தஞ்சை முருகவேள்.

கமலினி.

(உகூ0-ம் பக்கத்தொடர்ச்சி.)

களம்: ௭.

இடம் ஷை அரண்மனையிலோரறை: காலம்: காலை.

(சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் வீற்றிருக்கிறார்கள்.)

சக்ரவர்த்தி:—கண்மணி. கமலினி கொண்டிருக்கிற எண்ணம் உண்மைதானாவென்று நீ யவளுடன் வந்திருக்கிற பெண்ணிடத்தில் விசாரித்தாயா?

சக்ரவர்த்தினி:—ஆம். நேற்று சாயந்திரம் அவளை யழைப்பித்துக் கேட்டேன். மந்திரி சொன்னபடியேதான் அவளுஞ் சொன்னாள்.

சக்ரவர்த்தி:—ஆனாலதுண்மைதான். அப்படியானாலவள் எண்ணத்தை நிறைவேற்றி நான் நேற்றுச்சொன்னபடி செய்வதி லுனக்கு ஆக்ஷேபணையில்லையே?

சக்ரவர்த்தினி:—எனக்கு ஆக்ஷேபணை என்ன இருக்கிறது? அப்படிச் செய்வதில் எனக்கு மிக்க சந்தோஷந்தான்.

சக்ரவர்த்தி:—அப்படியானால் கமலினியை அழைத்துவரச் செய்.

சக்ரவர்த்தினி:—சேவகா! கமலினியை அழைத்துவா. (சேவகன் தெண்டமிட்டுப் போகிறான்.)

சக்ரவர்த்தி:—இவ்விஷயத்தைப் பற்றி எப்படி யவளிடம் கேட்பது? நீ கேட்கிறாயா?

சக்ரவர்த்தினி:—இல்லை. நீங்கள்தான் கேளுங்கள்.

(கமலினி வந்து எல்லோரையும் நமஸ்கரித்து நிற்கிறாள்)

சக்ரவர்த்தி:—கமலினி! இப்படி உட்காரு. எதற்காக உன்னை யழைத்தேனென்று தெரியுமா?

கமலினி:—(குனிந்துகொண்டு) தெரியவில்லையே.

சக்ரவர்த்தி:—நான் நேற்று உனக் கென்னவேண்டு மென்று கேட்டதற்கு ஒன்றுந் தேவையில்லையென்று சொன்னாயே. ஒன்றுந் தேவையில்லையா உனக்கு?

(கமலினி வெட்கி மௌனமாயிருக்கிறாள்). நீ ஒருவிதமான எண்ணங் கொண்டிருக்கிறதாகவும் அதை நிறைவேற்றிக் கொள்

ளும்பொருட்டு இவ்விடத்திற்கு வந்தனையென்றும் கேள்விப்பட்டேனே. அது உண்மைதானா?

(கமலினி இன்னும் மௌனமாயிருக்கிருள்) இப்பொழுது சொல்வதற்கு இவ்வளவு வெட்கப்படுகிருயே. வரும்போது எப்படிச் சொல்லலாமென்று நினைத்துவந்தனை? நீ வீரகேசரிமன்னனிடத்தில் காதல்கொண்டு அவரை மணஞ்செய்ய விரும்புவது உண்மைதானா?

கமலினி:—(குனிந்துகொண்டு) மெதுவாய் ஆம்.

சக்ரவர்த்தி:—நீ அம்மன்னனரண்மனையிலேயே வளர்ந்து வருகிறதாகச் சொல்லுகின்றனை. நீ அவர்பேரில் காதல்கொண்டிருப்பதுபோல் அவருக்கு முன்னிடத்தில் அன்பு ஏற்பட்டிருந்தால் உங்களிஷ்டப்படி விவாகத்தை முடித்துக்கொள்ளலாமே. நான் செய்யவேண்டியது என்ன இருக்கிறது அவ்விஷயத்தில்?

கமலினி:—சிறுபிராயமுதல் நாங்களிருவரு மொன்ருய்க் கூடி விளையாடிக் கொண்டிருக்கிறோமாதலால் அவர்கள் என்னைத் தன் சகோதரியாகப் பாவித்து நேசிக்கின்றார்கள்.

சக்ரவர்த்தி:—(சிரித்துக்கொண்டு) ஆனால் நீ யவரை உன் நாயகனாகக் கருதுகின்றனை. அப்படியிருந்தால் நான்தான் என்னசெய்யக்கூடும்? உங்களிருவருக்கும் விவாகத்தை முடித்துவைக்கலாம். அவரை உன்னை நேசிக்கும்படி செய்ய என்னுலாகுமா? என்னுத்தரவுக் குட்பட்டு அவருன்னை விவாகஞ் செய்துகொண்டாலும் உன்னையன்புடன் நேசிக்கமாட்டாரே. அதுமாத்திரமல்ல. அவருக்கு விருப்பமில்லாமலிருந்தால் என்மூலமாய் நீ உன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டதை யுத்தேசித்து உன்னை மிகவும் வெறுப்பாகவும் நடத்துவாரே. அப்படியானல் உன் வாழ்நாள் முழுவது முனக்குத் துன்பமே யல்லாமல் இன்பம் ஏற்படாதே. அதைப்பற்றி நன்ருய் யோசித்துக்கொண்டாயா?

கமலினி:—நன்ருயோசித்துத்தானிருக்கிறேன். கணவ ரன்பைக் கவருமுபாயங்கள் எனக்கு நன்ருய்த் தெரியும். என்னடத்தையினு லவர்களுடைய அன்பைச் சம்பாதித்துக்கொள்ளலாமென்ற தைரியமெனக்கிருக்கிறது.

சக்ரவர்த்தினி:—கமலினி! நீ சிறு பெண்ணாயிருந்தாலும் புத்தியிற் சிறந்தவள். நீ சொல்வதுண்மையே. புருஷர்கள் எவ்வளவு கொடியவர்களாயிருந்தபோதிலும் பெண்கள் தங்கள் நடத்தையினாலவர்களுடைய அன்பைச் சம்பாதித்துக் கொள்ளலா மென்பதிற் சந்தேகமில்லை.

சக்ரவர்த்தி:—கமலினி! உனக்கு அவ்வளவு தைரியமிருப்பதால் உன் விவாகத்தை கூடிய சீக்கிரத்தில் நடத்திவைக்கிறேன். வீரகேசரியையு மவர் தாயாரையு மிங்கு வரும்படி திருமுகமனுப்பப்பட்டிருக்கிறது. வந்தவுடன் முடித்துக்கொள்வோம். வீரகேசரியின் தாயாருக்கு இவ்விஷயத்திலென்ன அபிப்பிராய மிருக்குமென்று நினைக்கிறாய்?

கமலினி:—அவர்கள் என்னெண்ணத்தை யறிந்திருப்பார்களென்றே தோன்றுகிறது. ஆனாலிவ் விவாகத்திற்குச் சம்மதிப்பார்களென்று தோன்றவில்லை.

சக்ரவர்த்தி:—ஏனப்படி நினைக்கிறாய்?

கமலினி:—எப்படியிருந்தாலும் நான் கேவலம் ஒரு வயித்தியன் மகள்தானே. மேலுமவ்வூர் வயித்தியன் மகள். அவ்வரசனே என்னை மணஞ்செய்வதென்றால் கேவலமாய்த் தோன்றுமல்லவா?

சக்ரவர்த்தி:—அதை யுத்தேசித்துத்தான் அவருடைய தாயாருக்குச் சம்மதமிராதென்று நினைக்கிறாயா? வேறு காரணங்களுமுண்டோ?

கமலினி:—நானறிந்தவரையிலும் வேறு காரணங்க ளிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. என்பிறப்பை யுத்தேசித்துத்தான் சம்மதிக்கமாட்டார்களென்று நினைக்கிறேன்.

சக்ரவர்த்தி:—அப்படியானால் பார்த்துக்கொள்வோம். அவர்களெல்லோரும் வரட்டும்.

(எல்லோரும் போகிறார்கள்)

அங்கம் II முற்றிற்று.

அங்கம் III.

களம் 1.

இடம்: ஷ்டி அரண்மனையிலோரறை. காலம்: காலை.

(சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் வீற்றிருக்கின்றார்கள்.)

மங்கையர்க்கரசி:—(வந்து இருவரையும் நமஸ்கரித்து) (சக்ரவர்த்தியை நோக்கி) வியாதிமுற்றிலும் குணமாகி உடம்புக்கு ஆரோக்கியமாயிருக்கிறதென்று கேட்டு மிகுந்த சந்தோஷமடைந்தேன்.

சக்ரவர்த்தினி:—இப்படியுட்காருங்கள். எல்லா முங்களால் ஏற்பட்ட பாக்கியந்தான். உங்கள் கமலினியே எனக்கு மாங்கில்யந் தந்தவள்.

மங்கையர்க்கரசி:—அவளிடத்தில் அவ்வளவு சிறந்த மருந்திருந்தது எனக்குக்கூடத் தெரியாது. திருப்பரங்குன்றத்திற்குப் போவதாகப் புறப்பட்டுவந்தாள். அங்கிருந்து இங்கு வரப்போகிறதாகக் கடிதமெழுதியிருந்தாள்.

சக்ரவர்த்தினி:—அவர்க ளிவ்வளவுகாலம் வியாதியினல் கஷ்டப்பட்டதற்கு தெய்வமே வந்து குணப்படுத்தியதுபோல் கமலினி வந்தாள்.

சக்ரவர்த்தி:—இப்பொழுதாவது இவ்வளவு புகழ்ந்து பேசுகிறாயே? நான் கொஞ்ச நேரமதிகமாக நித்திரை செய்திருந்தால் அவளுயிர் போயிருக்குமல்லவா?

சக்ரவர்த்தினி:—அச்சமயத்தில் புத்தியில்லாமலப்படிச்செய்து விட்டேன்.

மங்கையர்க்கரசி:—அந்த நிலைமையில் யாரிருந்தாலு மப்படித்தான் செய்திருப்பார்கள்.

சக்ரவர்த்தி—கமலினியு மப்படித்தான் சொன்னாள். கமலினியைப் பார்த்தீர்களா?

மங்கையர்க்கரசி:—இங்கு வருவதற்குமுன் னவளுடன்தான் பேசிக்கொண்டிருந்தேன்.

சக்ரவர்த்தி:—என்னசொன்னாள்?

மங்கையர்க்கரசி:—தான் வந்து மருந்து கொடுத்ததும் கஷ்டமடைந்தது மெல்லாஞ்சொன்னாள்.

சக்ரவர்த்தி:—தங்களை இங்கு வரவழைத்த காரணத்தைப் பற்றி ஏதாவது சொன்னாளா?

மங்கையர்க்கரசி:—நானதைப்பற்றி யவளுடன் கேட்கவுமில்லை அவள் சொல்லவுமில்லை.

சக்ரவர்த்தி.—அவள் விஷயமாய் ஆலோசிப்பதற்காகவே தங்களையும் வீரகேசரியையும் வரவழைத்தேன்.

(இன்னும் வரும்.)

டி. யம். சங்கரலிங்கம்பிள்ளை.

345

சாணக்கிய சதகம்.

வடமொழிக்கணுள்ள "சாணக்கிய சதகம்" என்னும் நீதி நூலை வடமொழி வல்லார் பலரும் அறிவார். அது சாணக்கியர் என்னும் பெயருடைய பண்டிதர் செய்தது. சாணக்கியராவார் மகததேசராசனாயிருந்த சந்திரகுப்தனுக்கு மந்திரியாயிருந்த ஒரு சந்நியாசி என்று சிலர் கூறுவார். அந்நூலிலே பலவகையான நீதிசாரங்களும் வருகின்றன. அவற்றுள்ளே பல நீதிசாரங்கள் தமிழ் மொழியிலுள்ள நீதி நூல்களிலே காணப்படாதனவாகும். சில நீதிசாரங்கள் நீதி வெண்பா, வாக்குண்டாம், நான்மணிக்கடிகை, திருக்குறள் முதலியவற்றிலே காணப்படுவனவாகும். சுலோகங்கள் பெரும்பாலும் சிறுவர்கள் கற்றுக்கொள்ளுதற்கேற்ற இலகு நடையுடையன. நான்மணிக் கடிகை போல நான்கு விடயங்களைக் கூறிச் செல்லும் சுலோகங்கள் பலவாகும். இது இப்போது தமிழ் மொழியிலே பெயர்த்து வெண்பா யாப்பிற் பாடப்பட்டிருக்கின்றது. இதனை அச்சிட்டு வெளிப்படுத்தினால் தமிழறிஞராலே நன்கு மதிக்கப்பட்டுத் தமிழ் நாட்டுக்குப் பயன்படுமோ? என்பது காரணமாகச் சில வெண்பாக்கள் இங்கே எழுதப்பட்டிருக்கின்றன.

வெண்பா. தருமவதிகாரி.

மேவுங் குலஞ்சீல மிக்கோன் றருமநெறி
யாவும் விரும்பு மியல்புடையோன்—ஏவிக்
கரும முடிப்போன் கலைஞன் குணவான்
தருமவதி காரியெனச் சாற்று.

வைத்தியன்.

ஆயுர்வே தப்பயிற்சி யாசை மிகுங்காட்சி
தாயனைய வன்பு தயைமுதலாய்—மேயகுணஞ்
சாற்றொழுக்க மென்பவைகள் சார்ந்தோ னெவர்களுக்கும்
ஏற்ற வயித்தியனென் றெண்.

எழுத்தாளன்.

சொல்வ தொருமுறையிற் சோராமற் கொண்டெழுத
வல்லோன் கரவேகம் வாய்ந்துளோன்—பல்பல நூல்
பார்த்துணர்ந்தோன் வல்விரைந்து பன்னு மெழுத்தறிவோன்
வாய்த்தவெழுத் தாளனென வை.

சேனாபதி.

வீரன் பெலவான் விவேகி தருமநூற்
பாரங் கடந்தோன் பரிமுதலாம்—ஊர்திகளைத்
தானா நடாத்தித் தகைசேர் புகழ்பெற்றோன்
சேனாபதியென்று செப்பு.

தூதுவன்.

வாக்கின் மிகவல்லோன் வல்லறிஞன் மற்றொருவர்
நோக்கம் விரைந்து நுனித்தறிவோன்—மேக்குயரும்
தீர னினைவாளன் செப்புமொரு தூதுவனுஞ்
சாரமிகு வேந்தர் தமக்கு.

வாளுவன்.

பூணும் பெலமிகுந்தோன் புத்திரன்போற் பற்றுடையோன்
காணும் வலியமைந்த காயத்தோன்—பேணவுறும்
வாளுவநூல் கற்றோன் மதூரம் பெறச்சமைப்போன்
வாளுவனு மென்றார் மதித்து.

வாயிற் காவலன்.

பெட்புமிகக் காண்போன் பெலவா னவதானி
கட்புருவ மாதியினாற் காணவரும்—உட்குறிப்பை
ஆயுமறி வாள னதிவீரன் வேந்தர்மனை
வாயிலுறுங் காவலனும் வாய்ந்து.

இயற்கை யறிவு.

வாய்த்துத் தனக்கியல்பாய் வந்தவறி வில்லாற்குச்
சாத்திரங்க ளென்செய்யுந் தானாகப்—பார்த்துணருங்
கண்ணில்லாப் பாவிக்குக் கண்ணாடி யென்செய்யும்
எண்ணுங்கா லெல்லா மிருட்டு.

பருவச் செயல்.

பாலியத்திற் கல்வி பயிலவில்லை யெளவனத்திற்
சீல மிகும்பொருளுந் தேடவில்லை—சாலவதன்
பின்னறமுஞ் செய்யவில்லைப் பின்னர் நரைவருமேல்
என்னொருவன் செய்யு மியல்பு.

நித்திய சுகம்.

எரி,னுழுவாருக் கென்றமுண வுண்டுபிணிச்
சோர் வடையார்க் கென்றுஞ் சுகமுண்டு—வாரநெறி
தாங்கும் வனிதை தலைவன் பதியிலென்றும்
ஓங்கும் பெருமகிழ்ச்சி யுண்டு.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமி பிள்ளை,

சுன்னாகம்.

347

உ

சிவமயம்.

ஸ்ரீ ஞானசம்பந்த குருப்யோ நமா:

பர்மா நாட்டுக்கோட்டை நகரத்தாரின்

ஆங்கிலோ தமிழ்ப் பாடசாலையின்

முதல் வருஷ பூர்த்திக் கொண்டாட்டம்.

இருவர் சம்பாஷணை.

(கோவிந்தன்) இலக்குமணா! வெயில் மிகக் கொடுமையாயெறிக்கின்றதே. மணியோ நாலாகி விட்டது. லெக்குக்குப் போய் வாலாம் வருகிறாயா?

(இலக்குமணன்) கோவிந்தா! நானும் அப்படித்தான் எண்ணினேன் திருவருள் சம்மதமும் உன்னெண்ணமும் அப்படியேயிருந்தது நலந்தான்.

(கோ) இந்தப் பூங்காவன மிருப்பது ஜனங்களுக்கு எவ்வளவு உதவியாக விருக்கின்றது பார்த்தாயா? தினந்தோறும் வெகு சனங்கள் வந்து போகின்றார்கள்.

(இல) கோவிந்தா! நேற்று நாலுமணிக்கு இங்கு வரலாமென்று உன்னைப் பார்த்தேன். காணவில்லையே. எங்கு சென்றிருந்தாய்?

(கோ) அன்பனே! உன்னையும் அழைத்துப் போகாததற்காக விசனிக்கின்றேன். நேற்று நமது ஆறறை மாடியில் நமது குலதெய்வமான முருகப்பிரான் சந்நிதியில் நம்மவர்களால் தாபித்துள்ள வித்யாசாலையின் முதல் வருட பூர்த்திக் கொண்டாட்டம் நடை பெற்றது. அந்த மகோற்சவத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன். இராத்திரி ஏழு மணிக்குத் தான் திரும்பி வந்தேன்.

(இல) ஆம் நேற்றுக் காலையில் ஒரு பத்திரிகை வந்தது. ஆனால் அதை மறந்து விட்டேன். அங்கு என்ன விசேஷம் நடந்தது? சொல்ல முடியுமா?

(கோ) நன்றாகச் சொல்லுகிறேன். நீ மாத்திரம் கவனமாகக் கேட்கவேண்டும். நேற்று சுமார் 4 மணிக்கு பாடசாலையிலிருந்து மாணவர்களை உபாத்தியாயர் வரிசையாகக் கூட்டி பியாண்டு நாகசுரத்தோடு ஆறறை மேல் மாடத்திற்கு அழைத்துக் கொண்டு வந்தார். அவ்விடத்தில் முன்னமே நகரத்தாரும் மற்றும் பல வித்வ சிகாமணிகளும் நிறைந்திருந்தார்கள்.

(இல) பிறகு என்னடந்தது? சனங்கள் ஒரு சுமார் எத்தனை பேரிருக்கும்? பெருங்கூட்டமோ?

(கோ) என்ன அப்படிக் கேட்கின்றாய்? சுமார் ஆயிரம் சனங்களுக்குக் குறையாது. பிள்ளைகள் வந்தவுடனே குகப் பெருமானை வலமாக வந்து நமஸ்கரித்தனர். ப. நாச்சியப்பனென்னும் பால்யன் விநாயகர் துதியை சமஸ்கிருத

த்தில் வெகு இனிமையாக மெல்லிய குரலோடு சொன்னான். நடேசன், சிதம்பரம் என்னும் இரண்டு சிறுவர்கள் தமிழில் விநாயகர், வாணி துதியைத் தாள வரிசையோடு பாடினார்கள்.

(இல) இப்படியே ஒவ்வொரு பையன்களும் வரிசையாகப் பாடி முடித்தார்களா, வேறு சம்பவம் ஏதேனுமுண்டா?

(கோ) நண்பா! அவசரப்படுகிறாயே, அமைதியாய்க் கேள். தெரிந்தவரையில் நடந்தபடி சொல்லுகிறேன். பிறகு சபையார் விருப்பத்தின்மேல், நமது பாடசாலையின் நிரந்தர காரியதரிசிகளி லொருவரான ஸ்ரீ சா. அ. அருணசலந் **செட்டியாரவர்கள்** சபைத்தலைவராக விருந்து முகவுரை கூறினார்கள். அவர்கட்கு ஸ்ரீ சா. ராம. மு. சித. வெங்கடாசலம் செட்டியாரவர்கள் பூமாலை புனைந்தார்கள். (கரகோஷம்.) அதின்மேல் ஸ்ரீ அ. க. அ. மெ. நாகப்பசெட்டியாரவர்கள் பள்ளிக்கூடத்தின் முதல் வருஷ அறிக்கைப் பத்திரத்தை சொல் நயத்தோடு வாசித்தார்கள். அப்பால் பிள்ளைகளெல்லாம் கற்றதைக் கற்றவாறே தங்கள் மழலைச் சொற்களால் சபையோர் மகிழ இங்கிலீஷிலும் தமிழிலும் உபந்யாசித்தார்கள்.

(இல) தோழனே! மாணவர்களுடைய பெயர்கள் உனக்கு ஞாபகத்திலிருக்கின்றனவா? நான் உனக்குச் சிரமத்தைக் கொடுப்பதற்கு ஆயாசப்படற்க. ஆசையால் கேட்கின்றேன்? சிறிது சலியாமல் சொல்லுக.

(கோ) நேசனே! நீ சலியாமல் கேட்பாயாயின் சொல்வதில் எனக்கு ஆயாசமுமில்லை, சலிப்புமில்லை. மேல் சொல்லப் போகிறபடி சிறுவர்கள் உபந்யாசம் நடந்தது.

இராமன் தமிழ்ப் பாட்டுக்களைப் பண்ணோடு பாடினான். C. இராமன் K. L. இராமன் இங்கிலீஷில் சம்பாஷணை செய்தார்கள். சுப்பய்யா, சிதம்பரம் தேவாரத்தை பண் வரிசையோடு பாடினார்கள். K. சிதம்பரம் இங்கிலீஷில் பாட்டுப் பாடினான். பழநியப்பன், காசி இருவரும் இங்கிலீஷில் பேசினார்கள். L. அருணசலம் இங்கிலீஷில் பாடினான். மற்றொரு இங்கிலீஷ் பாட்டை அருணசலம், வள்ளியப்பன் என்னும் இருவர்களும் வெகு அமைதியாய்ப் பாடினார்கள். பழ. காசி. கல்வி என்னும் வியாசத்தைக் கெம்பீரமாகப் படித்தான். நடேசன், அருணசலம் இங்கிலீஷ்ப் பாட்டை ஒத்துப் பாடினார்கள். கிருட்டிணன், மெய்யப்பன் இருவரும் இங்கிலீஷில் சம்வாதமாகப் பேசினார்கள். நாச்சியப்பன் V. இராமன் இருவரும் தருமம் எது என்பதைத் தமிழில் வாசித்துப் பேசினார்கள். சோமசுந்தரம், இராமன் இங்கிலீஷில் சம்பாஷித்தார்கள். அப்படியே வள்ளியப்பனும், சிதம்பரமும் பேசினார்கள். சோமசுந்தரம் இங்கிலீஷில் பாட்டுப் பாடினான். நடேசன், இராமன், சுப்பய்யா, சிதம்பரம் இந்நால்வரும் தாளம் போட்டுக்கொண்டு சுப்பிரமணியர் தோத்திரம்

யிருப்பினன்றே முடிவு பெறவில்லையென வாதித்தற்கிடனுளதாகும். அவ்வாறு பவணந்தியார் கூறுதிருப்பவும் மங்கலங் கூறியு முடிவுபெறவில்லை யெனக்கூறுவது எவ்வாறு பொருந்தும்?

பவணந்தியார் ஐந்ததிகாரம் செய்திலர். இரண்டதிகாரங்களேசெய்தனர். என்பது சுவாமிகள் கருத்தாயின் தாம் திருத்தியருளிய விருத்தியுரையில் இவ்விஷயத்தையே யெடுத்து விளக்கியிருத்தல் கூடும். ஒருக்கால் விருத்தியுரையை முற்றும் பார்த்துத் திருத்தவில்லை. சிலசில இடங்களைப்பார்த்துத் திருத்தி யிருக்கலாம் எனக்கொள்ளின் தாம் திருத்தப்புக்குழித் தமக்கு உடன் பாடில்லாதபாகம் வரக்கூடியதைக் குறிப்பிட்டுப் பார்த்தல் தானே இயல்பு. ஆதலால் பொருள்முதலிய மூன்றும் அக்காலத்துள்ளன போலுமென்ற சங்கரநமச்சிவாயப்புலவர் உரையைச் சுவாமிகள் திருக்கண் சாத்தவில்லையென்றல் பொருந்தாது.

அற்றாயின் விருத்தியுரை வாசகமும் தருக்கசங்கிரக வாசகமும் தம்முண் முரணுவனவன்றே எனின் கூறுதும்.

தருக்க சங்கிரகத்துள் "முடிவுபேறு காணமையின், என்பதற்குப் பொருள் கொள்ளுங்கால் முடிவுபேறு காணப்படாமையின் அதாவது முடிவுற்றதென்பது பிரசித்தமின்றி அழிவுபட்டமையால் எனக்கொள்ளவேண்டும். "முடிவு பேறின்று,, என்புழியும், முடிவுபெறுதல் இல்லை அதாவது முடிவு பெற்றதாக இப்பொழுதில்லை எனக்கொள்ளவேண்டும். இங்ஙனம் பொருள் கொண்டால் தருக்க சங்கிரகத்துக்கும் விருத்தியுரைக்கும் வித்தியாசம் இலதாகும். ஒன்றுதோன்றாமையும் தோன்றி உடனே அழிதலும் பயன் வகையால் ஒன்றுதான்.

ஆதலின் பவணந்தியார் ஐந்ததிகாரங்களுமே செய்தனரெனக் கோடல் அமையுமென்பது எமது கருத்து. இவ்வாறே இக்கூற்றை விரித்துச்செந்தமிழ்ப் பத்திராசிரிய ரவர்களும் தமது பத்திரிகையில் எழுதியிருக்கின்றார்கள். சில வித்துவான்கள் இரண்டென்றதையே கூறுகின்றார்கள். அவரவர்கள் கருத்துக்குத் தோன்றும் வகையில் தம்தம் உண்மையை வெளியிடுவதில்யாரும் ஒருவர்மீதொருவர் குறைகூறி வாதிடல்கூடாது. இங்ஙனம் பலர்கூறும் ஏதுக்களைக் கொண்டு அறிவுடையார் ஆராய்ந்துமுடிவு செய்துகொள்க.

பத்திராதிபர்.

உதணயன் கதை :—எட்டயபுரம் ஸம்ஸ்தான ஐஸ்கூல் ஆங்கிலத்தலைமை ஆசிரியராகிய ஸ்ரீமாந் ஸ்ரீ அ. **திருமலைக்கோளுந்து பிள்ளையவர்கள் பீ. ஏ.** வடமொழியினின்று தமிழில் குறிப்புரையுடன் மொழிபெயர்த்தெழுதியது. இக்கதையுள் சத்தியம், நன்றிமறவாமை, கடவுள் பக்தி, புண்ணியபாவ பலன்கள், பரோபகாரமாட்சி, முதலிய சிறந்த விஷயங்கள் பல நன்கு விளங்குகின்றன. மாணுக்கர்கட்கு மட்டுமன்றிப் பெரியார்க்கும் நலந்தரத்தக்கது. இதன் விலை ரூபா ஒன்றுதான். வேண்டுவோர் இதனை ஆக்கியோருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறித்த நான்கு நூல்களையும் எமது பார்வைக்கனுப்பிய ஸ்ரீமாந் சாராம மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களிடத்து இடையரூது நன்றி பாராட்டுங்கடமை யுடையேம்.

ஒட்டக்கூத்தர், இரட்டையர், படிக்காசுப் புலவர் சரித்திரம்.—மேற்கூறிய அரும்பெரும்புலவர்கள் சரித்திரத் தமிழ்ப்புத்தக மொன்று சென்னை மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியரரிடமிருந்து வரப்பெற்ளூேம். இதனை யெழுதினவர் கோயமுத்தூர் சாரதாவிலாஸ சபைக்காரியதரிசி ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களேயாவர். முதலியாரவர்கள் மிகவும் சிரமமுற்றுப் பழம் புலவர்கள்சரித ஆராய்ச்சி செய்துவருபவர்களென்பதைப் பலருமறிவர். அதினும்தம்மினத்தவராகத் தம்மாற் கொள்ளப்பட்ட இப்புலவர்களைப் பற்றி யெழுதியிருப்பதில் மிகவும் அபிமானமும் திறமையுந்தோன்றக்காட்டியிருப்பார்ளென்பது நாம் கூறியறியவேண்டுவதன்றே. இதனை ஜனரல் ஸ்ப்ளைஸ் கம்பெனியார் மிகவும் அழகாக உயர்ந்த காகிதத்தில் கண்ணையுமனத்தையும் கவரத்தக்கவாறு அச்சிட்டுள்ளார்கள். இதன் விலை எட்டணுவே. வேண்டுவார் சென்னை மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரிடம் பெறலாம்

சோழன் கரிகாற்பெரு வளத்தான்:— இவ்வரசர் பெருமான் சரித்திர ஆராய்ச்சியை சங்கநூல்களையும் சோழமண்டல சதகமுதலிய வேறு நூல்களையும், சிலாசாசனங்களையும் ஆதாரமாகக்கொண்டு நன்குசெய்து படிப்பவர்க்கு இனிமைபயக்குமாறு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. இதனை யெழுதிய தஞ்சை கல்யாணசுந்தரம் ஜஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ L. உலகநாத பிள்ளையவர்களை யாம் நன்கறிவோம். பிள்ளையவர்கள் கூரியமதியும் சீரியநூலறிவும் ஊக்கமும் பெற்றவர்கள். புத்தக வடிவமைப்பு மிகவும் சிறந்துளது. இதன் விலை அணு 12 தான். இத்தகைய சரித்திர ஆராய்ச்சி தற்காலத்துக்கு அவசியம் வேண்டுவதொன்றே. இதனை நமது பார்வைக்கனுப்பிய நூலாசிரியரவர்கட்கு நன்றி கூறுகின்ளூேம்.

தொல்காப்பியம் பொருளதிகார ஆராய்ச்சி :—இது தற்போது அருப்புக்கோட்டை முதலிய இடங்களில் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டராக

இருக்கும் ப்ரும்மஸ்ரீ வே. முத்துசாமியய்யர் பீ. எ, எல்டி. அவர்களால் எழுதப்பெற்று மதுரைத் தமிழ்ச்சங்கம் 12வது ஞூபூர்த்திகொண்டாட்டச்சபையில் வாசிக்கப்பெற்றது. இலக்கணங்களுள் பொருளிலக்கணம் சிறந்ததென்பதும், அதனை நன்கு ஆராய்ந்த புலவர்கள் பண்டைக்காலத்து மரியரேயென்பதும் தமிழ் வல்லார் நன்கறிவர்- தற்காலப் புலவர்களிற் பெரும்பாலார் இவ்வாராய்ச்சியிற் குறைவுபட்டவர்களேயாவர். இங்ஙனம் அருமைவாய்ந்த தொல், பொருளிலக்கணத்தைச்செவ்வனே ஆராய்ந்து அரியபெரியவிஷயங்கள் பலவற்றை எடுத்துவிளக்கி ஐயாவர்கள் வெளியிட்டிருப்பது நம்மவர்க்குப் பேருபகாரமேயாகும். பொருளிலக்கணங் கற்போர்க்கு இது சிறந்த துணையாகும். கற்றோர்க்கும் உவப்பைத்தரும் இதனை நமது பார்வைக்கனுப்பிய நூலாசிரியரான ஐயரவர்கட்கு இடையறாத நன்றி பாராட்டுகின்றோம்.

சங்கர சுந்தரி:—இது கும்பகோணம் இந்தியன் பத்திரிகையின் அதிபரான தென்கரை ப்ரும்மஸ்ரீ T. V. அய்யாசாமியய்யரவர்களெழுதிய ஒரு இனிய தமிழ்க்கதை. இக்கதையுள் அமைந்துள்ள நன்மைகள் பலவுண்டு ஆயினும் கல்யாணத்தரகரான அதிபாதகர்கள் விஷயமும் அவர்களால் எமாந்துபோனவர்கள் படும்பாடும் அவற்றினின்று தப்புதற்கு வழியும் நன்கு விளங்குகின்றன. படிக்க இனிமைதருவது. குதூகலமாகக் காலம்போக்க நினைத்து நாவல் என்ற கட்டுக்கதை படிப்பவர் மலிந்த இக்காலத்துக்கு இத்தகைய புத்தகங்கள் அவசியம் வேண்டியவைகளே. இதன் விலை அணா 12.

மர்மசாஸ்திர தர்மபோதினி:—இது மனிதர்களின் சரீர நிலையையும் ஆகாராதி கலங்களையும், ஜீர்ணசக்தி வகைகளையும், தேகப்பயிற்சி நன்மையையும், மற்றும் சரீரபோஷணை சம்பந்தமான பலவிஷயங்களையும் இனிது விளக்கும் வசனநூல். இதனை யெழுதியவர் **ஸ்ரீ பி. மணமங்கலாரவர்களாவர்**. வேண்டியவர்கள் 22 முத்தய நாயக்கன் தெரு வேப்பேரி, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம், இதன் விலை அணா ஐந்தே.

பத்திராதிபர்.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை.

அங்கத்தினர்களுக்கு விஞ்ஞாபனம்.

நமது சன்மார்க்க சபை அங்கத்தினர்களில், தாங்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்தது முதலிதுவரை தாந்தாஞ் செலுத்தவேண்டிய சந்தாத்தொகை முழுதுஞ் செலுத்தாதவர்களுஞ், சில வருடஞ் செலுத்திச் சில வருடஞ் செலுத்தாதவர்களுமாகப் பலருளர். சேர்ந்தகால முதலிதுவரை பாக்கியின்றிச் செலுத்தினோர் சிலரேயாவர். சபையின் ஐந்தாம் வருட அறிக்கை இப்பொழுது எழுதவேண்டுமாதலின் அதற்குள் அங்கத்தினர்களில் இது

புத்தகக்குறிப்பு.

ச்வேதசோப நிஷத். இது:—ருக்வேதம், (1) ஐதரேயோப நிஷத், (2) யஜுர்வேதம் - தைத்திரீயோபநிஷத், (3) கடோபநிஷத் (4) சுவேதாசுவதரோபநிஷத், (5) ஈசோபநிஷத், (6) பிரகதாரண்யகோபநிஷத், (7) ஸாமவேதம்-கேநோபநிஷத், (8) சாந்தோக்யோபநிஷத், (9) அதர்வணவேதம் - ந்ருஸிம்மதாபனீ உபநிஷத், (10) ப்ரச்னோபநிஷத், (11) முண்டகோபநிஷத் (12) மாண்டூக்யோபநிஷத், என்னுமிப் பன்னிரண்டு உபநிஷத்துக்களின் தமிழ்மொழி பெயர்ப்பான சிறந்தநூல். சிதம்பரம் ப்ரும்மஸ்ரீ நா. சு, ராஜாராமய்யரவர்களால் வெளியிடப்பெற்றது. ஐயரவர்கள்தம் அருமைப்பிதாஅவர்கள் மொழிபெயர்த் தெழுதிவைத்ததை வெளியிட்டதும் தற்காலம் தமிழ்ப்போஷகரும், மதுரைத் தமிழ்ச்சங்க உபாக்கிராசனாதிபதியும், பெருங்கொடை வள்ளலுமாகிய கானாடுகாத்தான் ஸ்ரீமாந் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களுக்கு இதனை உரிமைப்படுத்தியிருப்பதும் யாவரும்பாராட்டற்பாலனவே. இத்தகைய அருமைவாய்ந்த மொழிபெயர்ப்பு நூல்கள் நம்மவர்க்கு இன்றியமையாதனவாகும். தமிழ் மக்கட்குப் பெரிதும் பயன்படுவனவென்பது கூறவேண்டுவதில்லை. புத்தக உருவமைப்பு எல்லாவிதத்தாலும் மிகச் சிறந்துள்ளது.

ராஜவிசுவாசம்;—இத்தலைப் பெயர்கொண்ட சிறந்த தமிழ் வசனநூல் கருணைதங்கிய நமது ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் பட்டாபிஷேக ஞாபகச்சின்னமாக மேற்குறித்த ஸ்ரீமாந் சா ராம மு சித பெத்தாச்சி செட்டியாரவர்களால் வெளியிடப்பெற்றது. இதனுள் ஆங்கில அரசாட்சியின் பெருமையும், அதனால் நாம் அடைந்துள்ள பலநன்மைகளும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. செட்டியாரவர்கள் மனத்துள்ள ராஜவிசுவாசத்தை உலகம் அறிந்து பின்பற்றும்படி தூண்டுகின்றதான இச்சிறந்த நூலை ஒரு லட்சம் பிரதிகளாக அச்சிட்டுத் தமிழ் மக்கட்கு அளித்த இவர்களது குணவிசேடம் மிகவும் புகழத்தக்கதே. அன்றியும் இந்நூலை நமது சென்னைக் கவர்னரவர்களாயிருந்து பெரும் புகழ்பெற்ற நன்னீதிவாய்ந்த கனம் ஸர். ஆர்தர். லாலிமகிபருக்கு உரிமைப்படுத்தியதும் பாராட்டத்தக்கதேயாம்.

பஞ்சாதிகார விளக்கம்:—இது திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அருளிச்செய்தது. பஞ்சகிருத்திய வைபவத்தைக்கூறும் இந்நூலை அச்சிட்டுதவியவர்களும் மேற்குறித்த ஸ்ரீ மாந் சா, ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களே. இவர்கள் அருமைத்தந்தையாரான ஸ்ரீமாந் சா. ராம. மு. சிதம்பரஞ் செட்டியாரவர்கள் இந்நூலையச்சிடக் கருதிச்சித்தஞ்செய்து வைத்திருந்தார்கள். அவர்கள் காலஞ்சென்ற பின் தந்தை கருத்தை முடிப்பது மைந்தன் கடமையாதலை யுணர்ந்து சிறிதுந்தாழாது அவர்களருமைப் புத்திராகிய ஸ்ரீமாந் சா. ராம, மு, சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள் அச்சிட்டுபகரித்திருக்கிறார்கள்.

வீரகேசரி :—என்னம்மா இன்னுமிப்படியே பேசுகிறீர்கள்? பரிகாசஞ் செய்கிறீர்களா என்னை?

மங்கைபர்க்கரசி :—உன்னை நான் பரிகாசஞ் செய்வேனா? நான் சொல்வதுண்மையே. உன்னையே கமலினி நெடுநாளாக நேசித்துக் கொண்டிருக்கிறாள் உன்னையேதான் மணஞ்செய்யவேண்டு மென்றெண்ணத்துடனிங்குவந்தாள். உன்னையே தனக்கு மணஞ்செய்விக்க வேண்டுமென்று சக்ரவர்த்திபிடங் கேட்டிருக்கிறாள். உன்னையே யவளுக்கு மணஞ்செய்து வைப்பதாகவுஞ் சக்ரவர்த்தி வாக்களித்திருக்கிறார்கள்.

வீரகேசரி :—(சற்றுநேரம் பிரமித்திருந்து) ஆகா! இதென்ன மோசமாயிருக்கிறது. நானொருக்காலும் விவாகத்திற்குச் சம்மதிக்க மாட்டேன். என்னுடன் பிறந்த சகோதரி யென்று நினைத்திருக்கிற கமலினியை நான் விவாகஞ்செய்து கொள்ளவாவது? இதைவிட எனக்கு என்ன பாவமேற்படபோகின்றது? நீங்கள்தானெப்படிச்சம்மதித்தீர்கள்? நானவளைச் சகோதரியாகப்பாவித்து வருவது உங்களுக்குத் தெரியாதா? நீங்களெப்படி சம்மதித்தீர்கள்? அவளும் புத்திசாலியென்றெண்ணியிருந்தேன். இவ்வளவுதானா அவள் புத்தி? சரிதான். எல்லோரு மொன்றுசேர்ந்து என்னை மோசஞ்செய்யக்கருதி யிருந்தீர்களோ? நெடுநாளாக அவளிவ்வெண்ணங்கொண்டிருப்பதா! யுங்களுக்குச் சந்தேகமேற்பட்டிருந்தும் நீங்களதை யென்னிடஞ் சொல்லாமலிருந்ததை யுத்தேசிக்குமிடத்து நீங்களுமதற்கொற்றுமையா யிருந்ததாகவே தெரிகிறது.

மங்கையர்க்கரசி.—அப்பனே! என்பேரிலேனப்படி கோபித்துக்கொள்கிறாய்? நானா அவளை உன்பேரில் காதல்கொள்ளும்படி சொன்னேன்? நானா அவளை சக்ரவர்த்தியிடம்போ யிப்படிக்கேட்கும்படி சொன்னேன்? என்னையேன் கோபித்துக்கொள்கிறாய்?

வீரகேசரி —ஆனாலெப்படி நீங்கள் சம்மதித்தீர்கள்?

மங்கையர்க்கரசி :— எனக்கும் ஆதியில் சம்மதமில்லாமற்றானிருந்தது. அவள் நமது அரண்மனை வயித்தியர்மகளாயிற்றே. அவளை விவாகஞ் செய்துகொண்டால் நமது குடிகளுக்கு முன்னைப்போலொத்த அரசர்களுக்குமொரு இழிவாய்த்தோன்றுமே யென்று நினைத்து எனக்கதில் சம்மதமில்லாமல்தானிருந்தது. அப்படியேதான் சக்ரவர்த்தியிடமுஞ் சொன்னேன். அவர்கள் கமலினியைத் தன் மகளாகக் கருதுகிறதாகவும் நானுமப்படியேதான் பாவிக்க வேண்டுமென்றுஞ்சொன்னார்கள். அவர்கள் கமலினியிடத்திலவ்வளவு உரிமை பாராட்டிச்சொல்லும்போது நானென்ன செய்யக்கூடும். சம்மதந்தானென்று சொன்னேன். மேலும் அவளும் வேறொரு விஷயத்திலும் குறைந்தவளல்லவே.

வீரகேசரி :—உங்களுக்குமவள் நமது வயித்தியர் மகளென்ற ஆக்ஷேபணை தானிருந்ததோ? நானவளைச் சகோதரியாகப் பாவித்து வருகிறேனே! எப்படி விவாகஞ்செய்துகொள்வதென்ற எண்ண முண்டாகவில்லையோ?

மங்கையர்க்கரசி :—அதை நானவ்வளவு பெரிய காரியமாக எண்ணவில்லை.

வீரகேசரி :—ஆகையால் தானவ்வளவு சீக்கிரத்தில் சம்மதித்து விட்டீர்கள்.

மங்கைக்கரசி :—அஃதிருக்கட்டும் சக்ரவர்த்தி யுன்னையழைத்துக் கேட்பார்களே. என்ன சொல்லப்போகின்றாய்.

வீரகேசரி:—என்ன சொல்லப் போகின்றேன்? கமலினியை நான் சகோதரியாகப் பாவித்து வருவதா லவளை விவாகஞ் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை யென்றே சொல்லப் போகின்றேன்.

மங்கையர்க்கரசி:—சக்ரவர்த்தி கமலினிக்கு வாக்களித்திருக்கிறார்கள். நீ இஷ்டமில்லை யென்றே மறுதளித்து விட்டால் சக்ரவர்த்தியின் கோபத்திற் குள்ளாவாய். ஆகையால் நன்று யோசித்துக் கொள்.

வீரகேசரி:—யோசனை என்ன இருக்கின்றது? சக்ரவர்த்தியின் கோபத்திற் குள்ளாவதற்குப் பயந்து நான் சம்மதித்தால் என் வாழ் நாள் முழுதும் நான் வருத்தப்பட வேண்டியதா யிருக்குமே. அதற்கென் செய்வது? சக்ரவர்த்தியின் கோபத்தா லென் ராஜ்யம் வேண்டுமானால் போகும். அவ்வளவு தானே. வாழ்நாள் முழுவதும் துன்பத்தை யனுபவித்துக் கொண்டு ராஜ்யத்தை யாளுவதினும் மனத் திருப்தியோடு கூடிய ஏழையா யிருப்பதே உத்தமம்.

மங்கையர்க்கரசி:—அப்படி யெல்லாம் நினைக்காதே. சக்ரவர்த்தியின் ஆக்கினைக் குட் பட்டே நடக்க வேண்டும். அப்படி நடப்பதால் நீ நினைக்கிறபடி துன்ப மொன்று மேற்படாது. உனக்குக் கமலினியின் பேரில் வெறுப் பொன்று மில்லை. அவளுடைய அழகு குணங்களைப் பற்றி மேன்மையாகவே பேசுகின்றாய். ஆகையால் சக்ரவர்த்தியி னுத்தரவுப்படி விவாகஞ் செய்து கொண்டால் உனக்கு நாளடைவில் உண்மையான அன்பு ஏற்படு மென்பதிற் சந்தேகமில்லை. மேலும் அவ் விவாகத்தா லுனக்கு நன்மையே யேற்படும். ஆகையால் சம்மதித்து சக்ரவர்த்தியின் மனதையும் என் மனதையும் திருப்தி செய். இல்லாவிட்டால் எங்க ளிருவர்களுடைய அதிருப்திக்கும் பாத்தியப்படுவாய். (போகிறார்கள்)

(இன்னும் வரும்)

டி. யம். சங்கரலிங்கம்பிள்ளை.

சக்ரவர்த்தி :—நான் கேட்பதைப் பார்க்கிலும் தாங்கள் முதலில் அவரிடத்திற் கேட்பது உத்தமமென்று தோன்றுகிறது.

மங்கையர்க்கரசி :—சரி அப்படியே செய்கிறேன்.

(எல்லோரும் போகிறார்கள்).

களம் 2.

இடம்-ஷை அரண்மனையில் மற்றொரு அறை. காலம்-மாலை.

(மங்கையர்க்கரசியும் வீரகேசரியுமுட்கார்ந்திருக்கிறார்கள்).

மங்கையர்க்கரசி :—நம்மை எதற்காக சக்ரவர்த்தி யிங்கு வரவழைத்தார்களென்பதை யறிந்தாயா ?

வீரகேசரி :—தெரியவில்லையே. நான் சக்ரவர்த்தியைப் பார்த்தேன் அவர்களது விஷயமாயொன்றும் என்னிடத்தில் சொல்லவில்லை. நம்முடைய கமலினிதானே அவர்களுடைய நோயைக்குணப்படுத்தினளாம். என்ன ஆச்சரியம்! அவளிடத்திலவ்வளவு சிறந்த மருந்திருந்தது நமக்கெல்லாந் தெரியாதே. தாங்கள் கமலினியைப் பார்த்திருக்கலாமே.

மங்கையர்க்கரசி :—நான் கமலினியையும் பார்த்தேன் சக்ரவர்த்தியையுஞ் சந்தித்தேன்.

வீரகேசரி :—நம்மையிங்கு வரவழைத்த விஷயமாய் சக்ரவர்த்தி யுங்களிடமேதாவது சொன்னார்களா ?

மங்கையர்க்கரசி :—சொன்னார்கள்,

வீரகேசரி :—எதற்காக அம்மா. என்னிடஞ் சொல்லக்கூடாதா-

மங்கையர்க்கரசி :—உன்னிடஞ் சொல்வதற்காகவே உன்னை அழைத்து வரச்சொன்னேன். கவனமாய்க் கேள். கமலினி இங்கு வந்து சக்ரவர்த்தியை மூன்று நாட்களுக்குள் குணப்படுத்துவதாயொப்புக்கொண்டு மருந்து கொடுத்தனளாம். மூன்றாவது நாள் மாலையில் சக்ரவர்த்தி மூர்ச்சை யடைந்து விட்டார்களாம். எல்லோர்களும் பார்த்துவிட்டு—

வீரகேசரி :—அச்சங்கதிகளெல்லாஞ் சக்ரவர்த்தி என்னிடஞ் சொன்னார்கள். கமலினி எதற்காக இக்காரியத்தில் பிரவேசித்தாள்?

மங்கைக்கரசி :—அதைத்தான் சொல்லப்போகிறேன். சக்ரவர்த்தி குணமானபின்பு மிகுந்த சந்தோஷமடைந்து கமலினிக்கு ஏராளமான பூமியும் பொருளும் கொடுக்கும்படி யுத்தரவு செய்

ர்களாம். அவ்வையெல்லாம் தனக்குத் தேவையில்லை யென்று சொல் லிவிட்டாளாம்.

வீரகேசரி :—என்ன அவையெல்லாந் தனக்குத் தேவையில்லை யென்று சொல்லிவிட்டாளா? மற்று எதற்காக இங்கு வந்தனளாம்? பொருளை நாடித்தானிங்கு வந்தாளென்றல்லவோ நினைத்தேன்.

மங்கையர்க்கரசி :—நானுமப்படித்தான் நினைத்தேன். ஆனல் அப்படியல்ல, அவள் வந்தது வேறு காரியத்தை யுத்தேசித்து.

வீரகேசரி :—என்ன காரியம் அம்மா.

மங்கையர்க்கரசி :—அவள் ஒரு நாயகனை விரும்புகிறாளாம். சக்ரவர்த்தியைக் குணப்படுத்தி அவர்கள் மூலமாய் அந்நாயகனை மணஞ்செய்து கொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன் அவளிங்கு வந்ததாகத் தெரிகிறது.

வீரகேசரி :—என்ன ஆச்சரியம்! கமலினி ஒரு நாயகனை விரும்புகிறாளா? என்னிடஞ்சொல்லவில்லையே? ஒருவேளை மதுரைக்கு வருகிற வழியில் அந்நாயகனை சந்தித்தாளோ?

மங்கையர்க்கரசி :—இல்லையப்பா. உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான் நமதூரிலேயே ஒரு நாயகனை நெடுநாளாக நேசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

வீரகேசரி :—நான் நம்பவேமாட்டேன். ஒருக்காலுமப்படியிருக்காது. அப்படியிருந்தா லென்னிடஞ் சொல்லாமலிருக்கமாட்டாளே? இது யார் சொன்னது உங்களுக்கு? கமலினியே சொன்னாளா?

மங்கையர்க்கரசி :—அவள் சொல்லவில்லை. சக்ரவர்த்தி சொன்னார்கள்.

வீரகேசரி :— சக்ரவர்த்தி தெரியாமற் சொல்லியிருப்பார்கள். கமலினியை இங்கழைத்து கேட்கலாமா? அவள் வாயினற் சொன்னால்தான் நானதை நம்புவேன்.

மங்கையர்க்கரசி :—அவள் வாயினலேயே சக்ரவர்த்தியிடம் நேரில் ஒப்புக்கொண்டனளாம். மேலும் எனக்கே இது விஷயமாய் நெடுநாளாக ஒரு சந்தேகமுண்டு அது இப்பொழுது தெளிவாகி விட்டது.

வீரசேகரி :—என்ன சந்தேகம் நமதூரில் கமலினி ஒரு நாயகனை விரும்புகிறளென்ற சந்தேகமா?

மங்கையர்க்கரசி :—ஆம்.

357 373

நன்னூல் அதிகாரங்கள்.

383

நன்னூலியற்றிய பவணந்திமுனிவர் எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி என்னும் ஐந்ததிகாரங்களுமே செய்தார். அவற்றுள் முன்னிரண்டும் நின்று நிலவப் பின்மூன்றும் இறந்துபட்டன. என ஸ்ரீ சொ. வேலுச்சாமி கவிராயரவர்களும், பவணந்தியார் செய்தது முன்னிரண்டதிகாரங்கள் மட்டுமே, பின்மூன்றும் அவர்செய்யவில்லை. என ஸ்ரீ சி. நாகலிங்கம் பிள்ளையவர்கள் முதலானவர்களும் வைசிய மித்திரன் பத்திரிகை வாயிலாகத் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தனர். இவ்விஷயத்தில் எமது அபிப்பிராயத்தையும் வெளியிடவேண்டுமென்று மேற்காட்டிய நண்பர்களிருவரும் எழுதியிருக்கிறார்களாதலின் யாமும் எமது கருத்தை வெளியிடுகின்றோம்.

பவணந்தியார் ஐந்ததிகாரங்களும் செய்தனரென்பதற்கு ஆதாரங்களாவன :— 1) நன்னூற்சிறப்புப்பாயிரத்துள் "ஐந்துந் தருகெனச் சீயகங்கன் வேண்ட நன்னூற்பெயரின் வகுத்தனன்" என்பது. (2) அதன் விருத்தியுரைகாரரான சங்கரநமச்சிவாயப்புலவர் "இந்நூலுட் கூறிய பொருள் யாப்பணிகளென்னு மூன்றுமக்காலத் துள்ளனபோலும்" என்று கூறியது. (3) நன்னூலுக்கு சைனராற் செய்யப்பட்டதோர் பழைய வுரை ஏட்டுப்பிரதிகளில் "பழையன கழிதலு" மென்ற சொல்லதிகாரத்து இறுதிச் சூத்திரவுரைத் தொடக்கத்தில் "இந்நூலிற் சொன்ன ஐந்ததிகாரத்துக்குஞ் சிங்க நோக்காய் நிற்பதோர் புறனடை யுணர்த்துதனுதலிற்று" என்று எழுதப்பட்டிருத்தல். (இவ்வேட்டுப் பிரதிகள் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் ப்ரும்மஸ்ரீ மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதையரவர்கள் முதலிய வித்துவான்களிடத்தும் உள்ளன.) (4) பெரிய திருமொழித்தனியனுரைகாரர் "தமிழுக்கு எழுத்து முதலான ஐந்து லக்ஷணத்தையு மறுதியிடுவதான நன்னூலென்னுமொரு சாத்திர முண்டு" என எழுதியிருப்பது. (இவர் காலம் இற்றைக்கு 450 வருஷங்கட்கு முற்பட்டதென்பர்.) இந்நான்குஆதாரங்களைக் கொண்டு நோக்குமிடத்துப் பவணந்தியார் ஐந்ததிகாரங்களுமே செய்தனரென்ப.

இரண்டதிகாரங்களே செய்தனரென்பதற்கு ஆதாரமாவன:— தருக்க சங்கிரகத்தில் "மங்கலங் கூறிய வழியும் நன்னூல் முதலிய

வற்றின் முடிவு காணுமையின்" "நன்னூல் முதலியவற்றின் இடையூற்றின் மிகுதிப்பாட்டான் முடிவு பேறின்று" என எழுதப் பட்டிருத்தல். (2) பின் மூன்றதிகாரங்களிலவாதல். என்னுமிவ் விரண்டு ஆதாரங்களைக்கொண்டு பவணந்தியார் செய்தன இரண்டதி காரங்களே யென்ப.

இனி இவ்விரு திறத்த ஆதாரங்களையும் சீர் தூக்கிப்பார்த்து முடிவு கூறுதலே பொருத்தமுடையதாம். அங்ஙனமாராயுமிடத் துப் பாயிரத்துள்ளே ஐந்துந் தருகென வேண்ட முன்னோர் நூலின் வழியே நன்னூற்பெயரின் வகுத்தனன் எனக்கூறுதலானும், பிற் பட்டு இவ்விஷயத்தைப்பற்றி யெழுதியவருள் காலத்தால் முற்பட்ட வரான பெரிய திருமொழித்தனியனுரைகாரர் நன்னூல் ஐந்து லக்ஷ ணத்தையுமறுதியிடுவதெனக்கோடலானும், பழையசைனருரையில் புறனடைச் சூத்திரத்தை ஐந்ததிகாரங்கட்கும் பொதுவாகிய சிங்க நோக்கென்று கோடலானும், தருக்க சங்கிரகமெழுதிய சுவாமிகள் காலத்தவரான சங்கர நமச்சிவாயப்புலவர் பொருண் முதலிய பின் மூன்றுமக்காலத்துள்ளனபோலும் எனக் கூறினமையானும், தருக்க சங்கிரகத்துள் கூறப்பட்டது நன்னூல் விஷயத்தைக்கூற வந்த இட மன்மையானும் பவணந்தியார் ஐந்து அதிகாரங்களுமே செய்திருத் தல் கூடுமென்பதும், பின்மூன்றும் இறந்தொழிந்தனவென்பதுமே யாங்கொள்ளுமுடிவாம்.

ஆயின் பின் மூன்றதிகாரங்களுள் ஒரு சூத்திரமாவது யாண் டேனுங்காணப்படவில்லையே யெனின் எத்தனையோ நூல்கள் பண் டைக்காலத்திருந்தனவென்று பெயர் மாத்திரங் கேட்கப்படுகின்றன வன்றி அவற்றினின்றோர் பாவேனும் யாண்டுங் காணப்படாமை யாவரு முணர்ந்ததே, அது கொண்டு குறையின்மை பெறப்படும்.

அன்றியும் பவணந்தியார் மங்கலங்கூறிய வழியும் நூன்முடிவு பெறவில்லை யெனக்கொள்வதும் பொருந்தாது. என்னெனில் அவர் "நான்முகற்றொழுது நன்கியம்புவனெழுத்தே,, எனவும், "அறை குவன் சொல்லே,, எனவும் தனித்தனி யிரண்டு மங்கலம் கூறினர். இரண்டும் முடிவுபெற்றன. ஐந்துங் கூறுவேனென மங்கலங்கூறி

3775

359

வரை பாக்கியின்றிச் செலுத்தினோர் போலமற்றையன்பர்கள் தத்தம் சந்தாப்பாக்கித் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பும்படிகேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். சந்தாத்தொகை வருடம் ஒன்றுக்கு ரூபா ஒன்றுதானென்பது அங்கத்தினர் யாவருமுணர்ந்ததே.

அங்கத்தினர் யாவருக்கும் அவரவர் குறிப்பிட்ட விலாசத்துக்கே சபைக் கடிதமுதலியன அனுப்பப்பட்டு வருகின்றன. தற்சமயம் சிலர் அயற்றேசங்களில் வசிப்பதால் அன்னார்க்கும் இவ்விஷயம் அறிவித்தல் கருதி வித்தியாபாநுமூலம் தெரிவிக்கலாயிற்று. இனி விலாச மாற்ற வேண்டுவோர்களும் அவ்வப்போது எமக்கெழுதினால் அவ்வாறே செய்வோம். மேன்மேலும் அங்கத்தினர்களாகப் பல அன்பர்கள்சேர்ந்து சிறப்பிக்கவேண்டுமென்பது சபையார் விருப்பமாயினும் இதுவரை அங்கத்தினராக விருப்போரில் யார்க்கேனும் உடன்பாடின்றேல் அன்னார்கருத்தும் அறியச் சபையார் விரும்புகின்றனரென்பதும் இதனாலறிவிக்கின்றோம்.

மேலைச்சிவப்பட்டி P. O. புதுக்கோட்டைஸ்டேட். } காரியதரிசி, சன்மார்க்கசபை.
20-3-14.

அக்கிராசனாதிபதி விஷய அறிவிப்பு.

1914ஆம் மார்ச்சுமீ 16உ வெளிவந்த வைசியமித்திரன் 4-வது பக்கத்தில் "வைசிய சிவானந்த சபையங்கத்தினர்கள் இனி அக்கிராசனாதிபதிகள் பலரை நியமித்தல் கூடாது. அடுத்த ஆம் முதல் ஒரே அக்கிராசனாதிபதியையே வருஷோற்சவத்துக்கு நியமிக்கவேண்டும்!' என்று இவ்விஷயத்தைத்தீர ஆலோசித்து முடிவு செய்திருக்கின்றார்கள் என்று அறிகின்றோம்"

என எழுதப்பட்டிருக்கின்றது. வைசிய சிவாநந்த சபையில் நடந்த வருஷோற்சவக் கூட்டத்துக்குப் பின்பு ஒருமுறை பிரசங்க சபை கூடியது. காரிய நிருவாக விஷயமாக அங்கத்தினர்கள் சபை கூடியும் வேண்டியனவற்றைப் பேசிமுடித்திருக்கிறார்கள். சபையில் அக்கிராசனாதிபதி ஒருவரே யிருக்கவேண்டுமென்று யாதொரு விதமான முடிவுஞ் செய்யப்படவில்லை. மதுரைத் தமிழ்ச்சங்க முதலிய தமிழ் நாட்டுச்சபைகள் பலவற்றில் நடப்பதுபோல் வருஷோற்சவ காலத்தில் அப்போதுள்ள சௌகரியத்துக்கேற்றவாறு அக்கிராசனாதிபதி பலராக வேனும் ஒருவராக வேனும் நியமிக்க நேரும். ஒருவராகத்தானிருக்க வேண்டுமென்று வைசிய சிவாநந்த சபையாரின் கருத்து எற்பட்டதாக இல்லை யென்பதை நண்பர்கள் அறிந்துகொள்ளவேண்டியது. இங்ஙனம்

பிச. அரு. அரு. அருணாசலம் செட்டியார்,
வைசிய சிவாநந்த சபையின் அக்கிராசனாதிபதி.
(முகாம்) மதராஸ். 23—3—14.

சமாசாரக்கொத்து.

கொழும்பிலுள்ள பாரிஸ்டர் ஓட்டலின் தாழ்வாரத்தில் 130 அடி உயரமுடைய ஒரு தென்னை மரம் இருக்கின்றதாம். அது நாளை தள்ளிக் காய்த்து வருகின்றதாம்.

அமெரிக்காவில் பென்சில்வேனியா என்னும் ரயில்வே அதிகாரிகள் 133 வண்டிகளைப்பூட்டி அவற்றை மூன்று இஞ்சின்களிழுத்துச் செல்லும்படி செய்கின்றனர். அவ்வண்டித் தொடரின் நீளம் ஒன்னேகால் மைல் தூரத்திற்கதிகமாகின்றதாம்.

மனிதனது இருதயம் எவ்வாறிருக்கின்றது; அது கெட்டிருந்தால் எவ்வாறு கெட்டிருக்கின்றது; அதனை யெவ்வாறுசீர்படுத்தலாமென்பனவற்றை விவரமாக அறிய "ஹார்ட்பரோமீடர்" என்னுமொரு யந்திரம் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதாம். இந்த யந்திரம் இப்போது லண்டன் ஆஸ்பத்திரியிலிருக்கிறது.

இப்போது ஆஸ்டிரியாவில் அமெரிக்கப் பிரதிநிதியாயிருப்பவரது மனைவியான மிஸஸ் பிரடெரிக் கோர்ட் லாண்ட் பென்பீல்ட் என்பவரே மிகுதியாக இன்கம்டாக்ஸ் வரி கட்டுகின்றவராம். இவரது சொத்தின் மதிப்பு ஒருகோடியே நாற்பது லட்சம் பவுனும். இவர்க்கு அச்சொத்திலிருந்து வருஷந்தோறும் ஏழு லட்சம் பவுன் வருகின்றதாம். இவர் செலுத்தும் வரியின் தொகையே 49000 பவுனும்.

ஜெர்மன் சக்ரவர்த்தியால் தமது பெருமாட்டிக்கு பரிசளிக்கப்பட்ட ஓர் அதிசயமான ரத்தினக்கல் விளக்குவெளிச்சத்தில் பச்சைநிறமாகவும் சூரியவெளிச்சத்தில் தங்கநிறமாகவும் காணப்படுகிறதாம். ஸைபேரியாவில் அகப்பட்டு ஸாரீ யென்னும் மற்றொரு ரத்தினக்கல் பகலிற் பச்சையாகவும் இரவில் பலவர்ணமுடையதாகவும் காணப்படுகின்றதாம்.

ஜர்மன் தேசத்திலுள்ள டார்மோவா என்னுமூரில் ஹெட்விக்ஸ்ட்ராம்ஞ வென்னும் 118 வயதுள்ள ஒரு ஸ்திரீ யிருக்கின்றாள். அவளிப்போதும் உருளைக்கிழங்கு பயிரிடுந் தொழிலைச் செய்து வருகின்றனள்.

டார்ஞக் என்னுமிடத்தில் வசிக்கும் ஒரு வகைக்சாதியார் எப்போதும் இரவிலேயே கடவுளைத் தொழுவார்களாம். இவர்கள் சமீப காலத்தில் ஒரு நிலம்வாங்கிக் கோயில் கட்டத் தொடங்கும்போது இரவிலேயே அதற்கு அஸ்தி வாரக்கல் தீவர்த்தி பிடித்துக் கொண்டு நாட்டினார்களாம். பத்திராதிபர்.

சிவப்பிரகாசம் வைத்தியத்தொழிலில் நீண்ட அனுபவம் உடையவராதலால், அனுபவ ஞானம் இல்லாமல் வெறும் நூலறிவு மாத்திரம் வாய்க்கப் பெற்ற எனக்கு அவருடைய கூட்டுறவு பெரும் பயனை விளைவித்தது. இதற்கு முன் அறியாத பல நூதன வைத்திய முறைகளையும் மருந்து வகைகளையும் சிகிச்சை நுட்பங்களையும் நான் அவரிடமிருந்து கற்றுக்கொண்டேன். தாம் வழக்கமாக வைத்தியம் பார்க்கும் பெருங் குடும்பங்களில், வைத்தியம்பார்க்க நேரிடும்போது, சிவப்பிரகாசம் என்னையே அனுப்புவார். இதனால் பெரிய தனவந்தர்களின் சிநேகமும் எனக்கு வாய்த்தது.

ஏற்கனவே அளவுக்கு அதிகமாய் உலகத்தில் பரவியிருக்கும் தொழில்கள், வக்கீல் தொழிலும் வைத்தியத் தொழிலுமே என்பதை யாவரும் அறிவார்கள். மிகக் குறைந்த ஜனத்தொகையுள்ள சிறிய பட்டினத்திலும் சுமார் நாற்பது ஐம்பது வக்கில்களையும், பத்துப் பன்னிரண்டு வைத்தியசாலைகளையும், இருபது முப்பது வைத்தியர்களையும் இக்காலத்தில் நாம் பெரும்பாலும் பார்க்கிறோம். வக்கீல்கள் அதிகமாக அதிகமாக வியாச்சியங்கள் அதிகமாவதும், வைத்தியசாலைகள் பெருகப் பெருக வியாதியஸ்தர்கள் பெருகுவதும், வைத்தியர்கள் அதிகரிக்க அதிகரிக்கப் புதிதுபுதிதான வியாதிகள் தோன்றுவதும், உண்மை என்பதை உலகானுபவமறிந்த எவர்தான் மறுப்பார்கள்?

ஆகவே, காப்பிஹோட்டல்கள் ஊர்களில் மலிந்து காணப்படுதல்போல், வைத்தியசாலைகளும் வைத்தியர்களும் மலிந்து காணப்படும் இக்காலத்தில்,—அதிலும் திருச்சிராப்பள்ளியைப் போன்ற ஜன நெருக்கமும் நோய்ப் பெருக்கமும் கொண்ட இடத்தில்,—அதே தொழிலில் பிரவேசித்துள்ள எனக்கு எதிர்பாராதவிதமாகப் பெரும்பொருளும் வியாபகமான தொழிலும், தக்க வருவாயும், கிடைத்தால், நான் மனமகிழ்தல் ஒரு வியப்பாமோ? ஆகாது. ஏனெனில், என்னைப்போன்ற இளம்பருவத்தினர்க்கு இத்தகைய பேரதிர்ஷ்டம் உண்டாவது,—பெரும்பகுதி துன்பத்திற்கும் சிறுபகுதி நிலையற்ற இன்பத்திற்கும் இடமாயுள்ள இந்நிலவுலகத்தில்,—சாதாரணமாக நிகழக்கூடிய சம்பவமன்று. இத்தகைய உன்னத நிலைமை எனக்கு வாய்ந்த இரண்டு வருஷங்கள் கழிந்தவுடன் சிவப்பிரகாசம் தேசயாத்திரை செய்யப் புறப்பட்டு விட்டார். சிறிது காலம் வரையில் அவருக்கும் எனக்கும் கடிதப் போக்கு வரவு இருந்தது. பிறகு அவரிடமிருந்து கடிதம் வருவது நின்றே போயிற்று.

என்னைவிட்டுப் பிரிவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர்தான், முதலிற் சொல்லப்பட்ட "காதல்" விஷயமாய் மிகுந்த உற்சாகத்துடனும் சாமர்த்தியத்துடனும் சிவப்பிரகாசம் மிக விரிவாகப் பிரஸ்தாபித்தார். அவருடைய விரிந்த பிரஸ்தாபத்திற்கு நான் அளித்த பதில் மோனவிரதமும்

அலட்சிய நோக்கமுமேயாகும். அவர் எனக்குச் செய்த பேருதவியும், இயல்பாகவே கௌரவமும் கண்ணியமும் வாய்ந்த ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்ததினால் எனக்கு ஏற்பட்டிருந்த இயல்பும், வைத்தியர்களுக்கு அவசியம் இருக்க வேண்டிய முகமலர்ச்சி, சாந்த நோக்கம், இனிய மொழியாதிய இவைகள் இயல்பாகவே என்னிடம் அமைந்திருந்தமையும், ஜனோபகாரமான பொது விஷயங்களில் நான் கொண்டிருந்த ஊக்கமும், இவை எல்லாவற்றையும் விடக் கடைசியாய்,—ஆனால் முதன்மை பெற்றதாய்,—"திறமையும் கைராசியுமுடைய வைத்தியர்" என்று வலியாரும் எளியாரும் ஒருங்கு புகழ்வதால் எனக்குண்டான கீர்த்தியும் ஒன்று சேர்ந்து திரிசிரபுரத்திலும் ஏனைய தமிழ் ஜில்லாக்களிலும் என்னுடைய மதிப்பையும் கௌரவத்தையும் நிலை நாட்டிவிட்டன;

ஆனால், திரிசிரபுரத்திலேயே எனக்குப் போட்டியாக வைத்தியம் செய்துவந்த வைத்தியர் ஒருவர் இருந்தார். "இயற்கை நுண்ணறிவும் சமயோசித யுக்தியும் இல்லாமலிருப்பதுதான் சாமர்த்தியம்" என்று கொள்வது நியாயமானால், இவரைச் சாமர்த்தியசாலி என்று சொல்லுவதும் நியாயமேயாகும். இரைப்பையும் இருதயமும் ஒன்றுதான்" எனப் போதிப்பதும், "மலபந்த மாத்திரை கைவசமில்லாதபோது விரோசனக் குளிகையைப் பிரயோகிக்கலாம்" என்று வற்புறுத்துவதும் வைத்திய சாஸ்திரமானால், **துலாம்கோதிரு** என்னும் பெயருடைய இந்த வைத்தியரும் வைத்திய சாஸ்திர நிபுணரேயாவார். நாகரீகமும், நூதன சாஸ்திர ஆராய்ச்சிகளும், புதிதுபுதிதான கொள்கைகளும், நவநவமான கல்விமுறைகளும் வரவர விருத்தியாகிவரும் இக்காலத்தில், மனிதர்களும் ஒரு விஷயத்தில்,—அதாவது சோம்பரினால் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்வதை விடுத்து நுனிப்புல் மேயும் விஷயத்தில்,—விருத்தியடைந்து வருகிறார்களன்றோ? ஒரு தொழிலை மேற்கொள்ளுகிறவர்களும், ஒரு சாஸ்திரத்தைப் படிப்பவர்களும் முனைந்து நின்று தாங்கள் பிரவேசித்துள்ள விஷயத்தில் பூரண அறிவைப் பெறுவது இக்காலத்தில் பெரும்பாலும் இல்லை. சிறு முயற்சியினால் பெரும்பலனை அடையவேண்டுமென்பதே பலருடைய நோக்கமாயிருக்கிறது. "எதுகை" "மோனை" என்பவை போன்ற சிலபதங்கள் தெரிந்தவுடன் "ஆசுகவிமாசிலாமணி" என்றும், "சீமான்களே!" "சீமாட்டிகளே!" என்பவை போன்ற இரண்டொரு வார்த்தைகளைப் பலர்முன்னிலையில் சொல்லத்தெரிந்தவுடன் "பிரசங்கபிரசண்ட மாருதம்" என்றும், "சரி" "கம" என்று சுரம் பிடிக்கச் சிறிது தெரிந்தவுடன் "சங்கீத சாகரம்" என்றும், சர்க்கரைப் பாகில் சுக்குத் தூளைக் கலவை செய்யத் தெரிந்தவுடன் "வைத்திய வரப்பிரசாதி" என்றும், "மதி முகம்" "ஆம்பல்வாய்" என்பவைபோன்ற சில வார்த்தைகள் தெரிந்தவுடன் நூல்கள் எழுத ஆரம்பித்தும், நாவல்கள்

கமலினி. 381

(340-ம் பக்கத் தொடர்ச்சி.)

மங்கையர்ச்கரசி. என்ன சங்கதி?

சக்ரவர்த்தி. சொல்லுகிறேன் கேளுங்கள் என்னைக்குணப்படுத்திபதற்காக நான் முன்னமே உத்தரவு செய்திருந்தபடி வேண்டிய பொருளும் பூமியுமளிப்பதாகச் சொன்னேன். அவையொன்றுந்தனக்குத் தேவையில்லையென்று சொல்லிவிட்டாள்.

மங்கையர்க்கரசி:—ஆனல் தான் பொருளையுத்தேசித்து இவ்விடத்திற்கு வரவில்லையென்று அவளென்னிடஞ் சொன்னதுண்மைதான்?

சக்ரவர்த்தி:—உண்மைதான். அவள் வேறெரு காரியத்தையுத்தேசித்து இங்கு வந்ததாக எனக்குத் தெரிந்தது. தெரிந்தபின் அவளைக்கேட்டேன் அவளுமொப்புக்கொண்டாள். அதென்ன காரியமென்று தங்களுக்குத் தெரியுமோ.

மங்கையர்க்கரசி:—அதைப்பற்றித்தான் அவளிடத்தில் கேட்டுக்கொண்டிருந்தேன். அவளதற்குப் பதிலுரைக்குமுன் சேவகன் வந்தழைத்தான் வந்துவிட்டேன்.

சக்ரவர்த்தி:—சேவகன் வராவிட்டாலு மவளுங்களிடத்தில் சொல்லமாட்டாளென்றே நினைக்கிறேன்.

மங்கையர்க்கரசி:—ஏனப்படி?

சக்ரவர்த்தி:—அது அப்படிப்பட்ட காரியம்.

மங்கையர்க்கரசி:—என்ன காரியம். ஒன்றுந்தெரியவில்லையே.

சக்ரவர்த்தி:—சொல்லுகிறேன் கமலினி தங்கள் குமாரன் வீரகேசரியிடத்தி லதிக காதல் கொண்டிருக்கிருள். என்னைக்குணப்படுத்தி என் மூலமாய் தன் விவாகத்தை முடித்துக்ககாள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் அவளிங்கு வந்ததாகத் தெரிகிறது.

மங்கையர்க்கரசி:—நான் கொண்ட சந்தேகம் சரியாகவேயிருக்கிறது. கொஞ்சகாலமாகவே இவள் வீரகேசரியினிடத்தில் காதல் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றிற்று. கொஞ்சகாலம் வீரகேசரியைப் பார்க்காமல் பிரிந்திருந்தாலாவது அவள் கொண்ட காதல் மாருதா என்ற எண்ணத்துடன்தான் அவள் திருப்பரங்குன்றத்திற்குப் போகவேண்டுமென்று கேட்டபொழுது தடைசொல்லாமல் விடை கொடுத்தேன்.

சக்ரவர்த்தி:—ஆனல் அவளப்படி நேசிப்பது தங்களுக்கு சம்மதமில்லையோ?

மங்கையர்க்கரசி :—சம்மத மில்லையென்று மில்லை. கமலினி ஒரு விஷயத்திலுங் குறைந்தவளல்ல. அவளுடைய அழகையும் யுத்தியையும் பக்தியையுங் கவனித்தால் அவளொரு அரசனது மனைவியாவதற்கேற்ற பெண்தான். ஆனாலவள் எங்களரண்மனை வயித்தியர் மகளாயிற்றே யென்பதை யுத்தேசித்துக் கொஞ்சம் மனதிற்கு சம்மதக்குறைவாக விருக்கிறது.

சக்ரவர்த்தி :—அதைத்தவிர வேறு காரணங்களில்லையே.

மங்கையர்க்கரசி :—இல்லவே இல்லை.

சக்ரவர்த்தி :— அப்படியானால் லவ்வெண்ணத்தை இப்பொழுதே விட்டு விடுங்கள். இன்று முதல் கமலினியை உங்களரண்மனை வயித்தியரின் மகளாகக் கருதாமல் பாண்டிநாட்டையாளுஞ் சக்ரவர்த்தியின் பெண்ணாகக் கருதுங்கள். இப்பொழுது சம்மதந்தானா?

மங்கையர்க்கரசி :—தாங்களவளிடத்திலவ்வளவு உரிமை பாராட்டும்போது நான் என்னதடை சொல்லப் போகிறேன்? ஆனால் வீரகேசரி இன்னுமவளெண்ணத்தை யறியாமல் அவளைத்தன் சகோதரியாகப் பாவிக்கின்றானே? அவன் மனதைத் திருப்புவதெப்படி ஒருவேளை தங்களாக்கினைக்குட்பட்டு விவாகம் செய்துகொண்டாலு மவனுக்குண்மையான அன்பு ஏற்படாதே?

சக்ரவர்த்தி :—அதைப்பற்றி நானுங் கமலினியிடஞ் சொன்னேன். வீரகேசரியி னன்பைத் தன்னடத்தையினால் சம்பாதித்துக் கொள்வதாகச் சொல்லுகிறாள்.

மங்கையர்க்கரசி :— அவள் சொல்வதுண்மைதான். அவள் வெகு புத்திசாலியாதலாலும் வீரகேசரியும் அவளுடன் பழகியவளுடைய குணங்களை யெல்லாம் நன்றாயறிந்தவனாகையாலும் அவனன்பை சம்பாதித்துக் கொள்வது கமலினிக்குப் பெரிய காரியமல்ல.

சக்ரவர்த்தி :—வீரகேசரியினிடத்தி லிவ்விஷயத்தைப் பற்றி யெப்படிக்கேட்பது?

மங்கையர்க்கரசி :—ஏனிங்கு வந்தானல்லவோ?

சக்ரவர்த்தி :—முதலில் தங்களிடத்தில் யோசித்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணி அவரிடத்தில் இது விஷயமாய் நானொன்றுங் கேட்கவில்லை.

மங்கையர்க்கரசி :—ஆனாலிப்பொழுது வரவழைத்துக் கேட்கலாமே.

365
409
383

ஆத்மநாதன்

அல்லது

காந்திமதியின் காதல்.

முதலாம் அதிகாரம்

காதல் என்பது யாது?

சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பிற்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே.—திருக்கோவையார்.

"இன்பமயமான இறைவன் இன்னுயிர்கட்கு இன்பமளித்தல் இனிது கருதி இயற்கை இயல்பினதாகிய இறைமைக் குணத்தால் இயற்றியுள்ள இயற்கைப் பேரற்புதப் படைப்பினுள், சரீர அமைப்பினும் மனோவமைதியினும் தம்முட் பெரிதும் மாறுபாடுடைய இரண்டு வகையான உடல்களை உயிர்கள் உலாவுதற்காக உண்டாக்கி, அவற்றுள் ஒரு பகுதிக்கு "ஆண்" என்றும், மற்றொரு பகுதிக்குப் "பெண்" என்றும் பெயர் அமைத்து, இவ்விருவகைப்பட்ட சரீரங்களில் வசிக்கும் இரண்டு ஆன்மாக்களை இவ்வேறுபாடு கொண்டே ஒன்றுபடுத்தி, அவைகளைப் பேரின்பப் பெருநிலையில் நிலைபெறச் செய்யும் பெருஞ்செயலானது, பெரிதும் போற்றத் தகுந்ததொன்றும். இவ்வுலகத்தில் மனிதன் கடந்து செல்லவேண்டிய "வாழ்க்கை" என்னும் பெரிய சமுத்திரம், "பெண்" என்னும் மரக்கலத்தின் உதவிகொண்டே கடக்கப்படுதல் வேண்டும். மனிதனாகிய மீகாமன்,—பிறப்பிறப்பாகிய பேரலைகளையும், பசி பிணி மூப்பாதிய மேடுபள்ளங்களையும்; கோபம், குரோதம், பொறாமை, காமமாதிய கொடிய நீர்வாழ் பிராணிகளையும்; செல்வம், தரித்திரம், சுகம், துக்கம், இன்பம், துன்பமாதிய மணல் மேடுகளையும் தன்னகத்தே கொண்ட,—"வாழ்க்கை" என்னும் பெருஞ்சாகரத்தைக் கடந்து,—'பேரின்பமுத்திநிலை'யாகிய இன்பத்துறை சேர்வதற்கு, அவனோடு ஒருங்கிருந்து இல்லறம் இயற்றுவதற்கேற்ற இல்லத் துணைவியாகிய "மனைவி" மரக்கலமாகவும், அவளுடைய இயற்கை யழகு வாய்ந்த சரீரம் துறை முகம் அறிவிக்கும் கலங்கரை விளக்கமாகவும், அவளுடைய சரசமதுரமொழி,—மாலுமியின் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் மரக்கலத்தைத் திருப்புதற்குதவும்,—சுக்கானாகவும்; அவளோடு ஒன்றுபட்டனுபவிக்கும் "சிற்றின்பம்" மரக்கலத்தையும் மீகாமனையும் ஒரு

ங்கே பேரின்ப முத்தித் துறையில் சேர்ப்பிக்கும் "நங்கூர" மாகவுமிருந்து பயன்படுதலினாலன்றோ "மனைமாட்சியில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை -யெனைமாட்சித் தாயினுமில்" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் நற்குண நற்செய்கையுடைய மனைவியின் பெருமையை இங்ஙனம் விதந்தெடுத்து ஓதுவாராயினர். மாலுமி துறைமுகம் சேர்வதற்குக் கப்பலின் உதவி அவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுதல் போலவும், கப்பல் துறைமுகம் சேர்வதற்கு அது மாலுமியினால் நடத்தப்படுவது அவசிய மாதல் போலவும், பேரின்ப முத்தித் துறையை ஆண்மக்கள் அடைவதற்குப் பெண்மக்களின் உதவியும், அதே துறையைப் பெண்மக்கள் அடைவதற்கு அவர்கள் ஆண்மக்களால் முறையுடன் நடத்தப்படவேண்டிய அவசியமும் இன்றியமையாதவையாகின்றன. மேலும, மாலுமியும் கப்பலும் சுகமாய்த் துறைமுகம் போய்ச் சேருங்கால் கப்பலிலுள்ள பிரயாணிகளும் சுகமாய்த் துறைமுகம் போய்ச் சேருதல் சாத்தியமாதல் போல, ஒரு காதலனும் காதலியும் ஒன்றுபட்ட மனத்தினர்களாயிருந்து இல்லறத்தினை இனிது நடத்துவதால், அவர்கள் தாங்கள் "முத்தித் துறை" போய்ச் சேருதலோடு பிற ஆன்மாக்களையும் அத்துறையிற் சேர்க்கும் ஆற்றலுடையவர்களாகிறார்கள். எங்ஙனமெனின்; எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் அருள்மயமாயும் அன்புருவாயும் விளங்குகின்றாராதலின், அவரை அடையவிரும்பும் ஆன்மாக்கள் அன்பினாலேயே அடைதல் வேண்டும். அதாவது ஆன்மா சுத்த அன்புமயமாய் விளங்குதல் வேண்டும். மனிதன் பிற ஜீவர்களிடம் அன்புபாராட்டி ஜீவகாருண்ணிய ஒழுக்கத்தோடு ஒழுகினால் மாத்திரந்தான், அவனுடைய ஆன்மா தன் இயற்கைக் குணமாகிய அன்புமயமாய்த் திகழும். ஆகவே, மனிதன் பிற ஜீவர்களிடம் அன்பு செலுத்தி, அதனால் தன் ஆன்மாவை அன்புருவாக்கி, அன்புருவாகிய இறைவனை அடையவேண்டியவனாகிறான். எல்லாச் சீவர்களையும் அன்புடன் நோக்கி அவைகளிடம் அன்பு செலுத்துவதற்கு முன், ஒரு ஆன்மா மற்றொரு ஆன்மாவினிடம் பூரண அன்பு செலுத்தவேண்டுவது அவசியமாகிறது. இத்தகைய அன்புரிமை எல்லாவகையினும் ஒப்புமை பெற்ற ஒரு தலைமகனுக்குள்ளும் தலை மகளுக்குள்ளும் மிகுந்து தோன்றுவதால் இவர்களுடைய அன்பின்திறம் விசேடமுடையதாகிறது. ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த மனத்துடன் செலுத்திவரும் அன்பானது முதிர முதிர, மற்றவர்களிடத்திலும் அன்புபாராட்டும் நிலைமை அவர்களுக்கு உண்டாகிறது. முதலில் வரையறைக்குட்பட்டிருந்த அன்புரிமை, நாளடைவில் விரிந்து வியாபகமுறுகின்றது. இறைவனுடைய சொரூபம் வியாபக அன்புருவாதலால், அத்தகைய அன்புருவத்தை ஆன்மா அடையும் போது அது இறைவனையே அடைந்ததாகிறது. ஆகவே இறைவனுடைய சேர்க்கையாகிய பேரின்பப் பெருஞ் சுகத்தை அடைவதற்கு, ஒரு காதலனும் காதலியும் பாராட்டும் அன்புரிமையும் அவர்களுடைய சேர்க்கை

சுமார் ஏழு வயதுள்ள ஒரு பெண் நோயாளியின் கழுத்தைத் தழுவியபடியும், தன் முகத்தை அவர் மார்பின்மீது சாய்த்தபடியும் வாய்விட்டு அழுதுகொண் டிருந்தாள். இந்தப் பெண் நோயாளியுடைய புத்திரியேயாவாள், என்னைக் கண்டவுடன், தம்மைச் சுற்றியிருந்தவர்களை அப்புறம் போகும்படி நோயாளி கையினுற் சைக்கினை செய்தார். எல்லோரும் அந்த அறையைவிட்டு வெளி யே, மிகுந்த வருத்தத்துடனும் அமைதியுடனும் சென்றூர்கள். ஆனுல் அந்தப் பெண் மாத்திரம் வாய்விட்டு அலறிக்கொண்டே வெளியே சென்றுள். இந்தப் பரிதாபமான காட்சியைப் பார்ப்பதற்கு என்மனம் சிறிதும் சகிக்கவில்லை. குலாம்காதிறு என்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு ஏதோ சொல்ல முயன்றூர். முதலில் அவரால் பேசமுடியவில்லை. பிறகு திடீரென்று ஏதோ ஒரு வகையான சக்தியால் உந்தப்பட்டுப் புதிய பலம் பெற்றவரைப்போல் பேச ஆரம்பித்து "ஆத்மநாதரே! மோஹனங்கியே உம்மை இங்கு வேதவதி மூலமாய் வரவழைத்தாள். உம்மிடம் சிகிச்சை செய்து கொள்ளுவதற்காக உம்மை நான் இங்கு அழைத்துவரச் சொல்லவில்லை. ஆனுல்,—" என்று கூறினுர்.

"ஆனுல், என்னை எதற்காக இங்கு வரவழைத்தீர்?" என்று நான் இடை மறித்துக்கேட்டேன்.

"எதற்காகவா! நீர் செய்துள்ள கொடிய வேலையை உம்மிடம் அறிவிப் பதற்காகவே நான் உம்மை இங்கு வரவழைத்தேன். என்னுடைய வாழ்நாளை நீர் அநியாயமாகக் கெடுத்துவிட்டீர். எந்தச் சமயத்தில் என்னுடைய வாழ்நாள் என் புத்திரர்களுக்கு அவசியமாய் வேண்டப்படுகிறதோ, எந்தச்சமயத்தில் என்னுடைய வாழ்நாள் மனிதசமூகத்திற்கு மிகவும் பயன்படக்கூடியதோ, அந்தச் சமயத்தில் நீர் அதை அழித்துவிட்டீர். இன்னும் சில வருஷங்களுக்கு மாத்திரம் நான் ஜீவித்திருக்கக் கூடுமானுல், அக்காலத்திற்குள் என்னுடைய குழந்தைகள் தகுந்த பருவத்தை அடைந்து தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் படியான நிலைமைக்கு வந்துவிடுவார்கள். அவர்களைப் பற்றிய கவலை சிறிதுமின்றி நான் இறத்தல் கூடும். ஆனுல் இப்போதோ அவர்களை நான் அநாதைகளாயும் புகலற்றவர்களாயும் விட்டுச் செல்லவேண்டியவனு யிருக்கி றேன். உம்முடைய மருந்தினுல் குணமடையாமல் துன்புற்ற எண்ணிறந்த நோயாளிகள் என்னுடைய சிகிச்சையினுல் குணமடைந்து என்னை வாழ்த்தி னுர்கள். அவர்களுக்கும் நான் இனிப் பயன்படப் போவதில்லை. நான் மனே வசியத்தாலும் யோகக் காட்சியாலும் வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தினுல் **'மனேபாவனையின் பலன்'** என்று கூறி என்னை ஏளனஞ் செய்தீர். எதுவா யிருந்தால் என்ன? சாஸ்திர ஆராய்ச்சி செய்து புதிது புதிதான உண்மையைக் கண்டு பிடிப்பதாயும் நூதன மருந்து வகைகளை உண்டாக்குவதாயும் கூறி,

நோயாளிகளை இன்னும்அதிகமான துன்பத்திற்கு உட்படுத்துவதைவிட, நான் மருந்தில்லாமலே அவர்களைச் சொஸ்தப்படுத்துவது சிறந்த தன்ருே? வீணுகப் பாசாங்கு செய்பவரே! உம்முடைய புத்திக்குப் புலப்படாமலும், அறிவுக்கு எட்டாமலும் எதாவதொரு அதிசயசம்பவம் நிகழ்ந்தால், 'அச்சம்பவம் நம்பத் தகுந்ததன்று; அச்சம்பவம் இயற்கைக்கு விரோதமானது' . என்று கூறுகிறீர். முற்றறிவும் முடிவிலாற்றலு முடைய முழுமுதற் கடவுளின் அற்புதச் செயலை அறிவதற்கு உமக்கு வன்மை உண்டா? ஆ! என் கண்முன் தூய்மையான வெண்புகைபோல் ஒன்றுசேரும் அவ்வுருவத்தை—" என்று குலாம்காதிறு மிகுந்த வேகத்துடனும் ஆத்திரத்துடனும் பேசிக்கொண்டிருந்தபோது அவருடைய பேச்சு நின்றுவிட்டது. அவரைக் கூர்ந்து கவனித்தபோது, அவர் இறந்துபோனர் என்பதை நான் அறிந்தேன். சிறிது நேரம் அங்கிருந்துவிட்டு நான் என் வீட்டிற்குத் திரும்பினேன்.

குலாம்காதிறு என்னை இவ்விதம் நிந்தித்துப் பேசியதற்குக் காரணம் யாதென நான் வீட்டுக்குச் சென்றபிறகு ஆலோசித்துப் பார்த்தேன். முதவில் காரணம் கண்டுபிடிக்க நான் அசக்தனுனேன். உண்மையில் நான் அவருக்கு எத்தகைய் தீங்கும் இழைக்கவில்லை. அவர் ஆஸ்திக மதத்தின ரான படியால் தம்முடைய கொள்கையை அவர் ஜனங்களுக்குப் போதித்தார். நான் நாஸ்திகமதத்தினனுதலால், என்னுடைய கொள்கைகளை நான் ஜனங்களுக்குப் போதித்தேன். அவர் மகமதியரானதால், இந்துக்களுக்கு அவருடைய வார்த்தையில் அதிகமான நம்பிக்கை யில்லை. நான் இந்து குடும்பத்தில் உதித்தவனுதலால், என்னுடைய வார்த்தைகளில் ஜனங்களுக்கு அதிகமான நம்பிக்கை இருந்தது. தவிர அவருடைய போதனையை நம்புவதைவிட என்னுடைய போதனையை நம்புவது ஜனங்களுக்குச் சுலபமாயிருந்தது. மேலும், திருச்சியில் மகமதியர்களை விட இந்துக்கள் அதிகமாயிருந்தார்கள்; இருக்கிருர்கள். ஆகவே, நாளடைவில் திருச்சிவாசிகளுள் பெரும்பாலார் என்னுடைய கட்சியைச் சேர்ந்தார்கள். இதனுல் குலாம்காதிறுவுக்கு மதிப்பும் செல்வாக்கும் குறையத் தலைப்பட்டன. தவிர, மகமதியர்கள் இயல்பாகவே முறட்டுத்தனமும் இந்துக்களை அலட்சியமாய் நினைக்கிற சுபாவமும் உடையவர்கள் என்பது என்னுடைய கொள்கையாதலால், இவ்விரு வகுப்பாருக்குள்ளும் வேற்றுமையுண்டாகும்படியாக நான் உபந்யசிப்பது வழக்கம். இதனுல் பொது ஜனங்களுக்குக் குலாம்காதிறிடம்,—பொதுவாகவே மகமதியரிடம்,—ஒருவகையான வெறுப்புண்டானது. இக்காரணங்களால், குலாம்காதிறுக்கு என்னிடம் பகைமையுண்டாயிருத்தல் கூடுமென்றும், அதனுலேயே அவர் இவ்விதம் என்னைத் தூஷித்தார் என்றும் நான் எனக்குள்ளேயே ஒருவாறு முடிவுசெய்துகொண்டேன். ஆனுலும் குலாம்காதிறு தன்னுடைய மரணு

துணைகொண்டு வெளிப் பிரபஞ்சத்தை அறிவது புறமனம் என்று சொல்லப் படும். புறமனம் என்று சொல்லப்படும் ஸ்தூல மனத்திற்கு மூளையின் உதவி இன்றியமையாது வேண்டப்படும். அகமனம் என்று சொல்லப்படும் சூக்கும மனத்திற்கு மூளையின் உதவி வேண்டுவதில்லை. சூக்கும மனம் எப்போதும் விழிப்பு நிலையிலேயே இருக்கும். ஆதலால் இந்தச் சூக்கும மனோசக்தியை மனிதர்கள் விருத்தி செய்யவேண்டும். இந்த மனத்தின் உதவியைக் கொண்டு மனிதர்கள் சாதிக்க முடியாதயல அரிய பெரிய காரியங்களைச் செய்து முடித்தல் கூடும். ஒவ்வொரு மனிதனிடத்தும் ஒருவகையான வசீகர சக்தி இருக்கின்றது. இச்சக்தி பலரிடம் குறைந்தும், சிலரிடம் மிகுந்தும் தோன்றும் மனிதனுடைய பார்வையிலிருந்தும், கை விரல்களின் நுனிகளிலிருந்தும் கட் புலனுக்குத் தோன்றாத மின்சார சக்தியைப்போன்ற ஒரு வகையான சக்தி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. மனிதன் தன்னுடைய மனோ சக்தியில் பூரண நம்பிக்கையுடனும் தான் மேற்கொள்ளும் காரியத்தை எவ்வித த்திலும்சாதித்து விடலாம் என்னும் உறுதியான எண்ணத்துடனும் இருந்தால், அவன் எத்தகைய காரியங்களையும் நிறைவேற்றுதல் கூடும். நோயாளிகளைக் கண்ணினால் பார்ப்பதினாலும், அவருடைய சரீரத்தை மேலிருந்து கீழ் நோக் கிக் கையால் தடவி விரல் நுனிகளை உதறுவதினாலும், சில மந்திரங்களை ஜெபி ப்பதினாலும் நாம் வியாதியை நீக்குதல் கூடும். இந்தச் சக்தியைக் கொண்டு பேய் முதலிய துஷ்ட ஆவேசம் பிடித்திருப்பவர்களைக் குணமாக்கலாம். தூர தேசத்தில் நிகழும் சம்பவங்களை அறியவும், தொலைவில் உள்ள ஒருவர் நினைப் பதை அறியவும், தூரதேசத்திலிருப்பவர்களுடன் சம்பாஷணை புரியவும், இற ந்துபோனவர்களுடன் சம்பாஷிக்கவும், இறந்து போனவர்களைச் சூட்சும சரீரத் தில் பார்க்கவும் இன்னும் இவை போன்ற பல அற்புதமான செய்கைகளைச் செய் யவும் இந்த மனோசக்தி ஆற்றல் வாய்ந்ததா யிருக்கிறது. இந்த மனோசக்தி யை விருத்தி செய்வதற்கு உரிய வழி தளராத பழக்கத்தினால் மனத்தை ஒரே நிலையில் குவியும்படி செய்தலேயாகும். ஆன்மா என்பது இச்சாஞானக் கிரியா சக்திகளையுடையதும், அருவமானதும், ஏகதேசவியாபக முடையதும், இறைவனுடைய அருட் பிரகாசத்திற்கு உரிமையுடையதுமான சேதன சித்து ப்பொருளாகும். மனத்தைவிட ஆன்மா மிகுந்த ஆற்றலும் அருமையும் வாய் ந்தது. சரீரம் இயங்குவதற்கு மனத்தின் உதவியும் மனம் இயங்குவதற்கு ஆன் மாவின் உதவியும் வேண்டப்படுவதால் இம்மூன்றும் ஒன்றுக் கொன்று நெருங் கிய சம்பந்த முடையன." என்று குலாம்காதிறு அன்றிரவு ஓரிடத்தில் உபந்நி யாசம் செய்துவிட்டுத் தம் வீட்டுக்குச்சென்றார்.

இவருடைய உபந்நியாசத்தைக் கேட்பதற்கு நான் சென்றிருந்தேனாயினும், இவர் சொல்லிய விஷயங்கள் அனைத்தும் பொருத்தமற்றவைகளாகவே எனக் குத் தோன்றின. இவருடைய உபந்நியாசத்தைக் கண்டனம் செய்து மற்று

நான் பேசுகிறதென்னும் தீர்மானத்துடன் நான் வீட்டுக்குச் சென்றேன். அப்போது, மணி ஒன்பது இருக்கும். நான் போஜனம் செய்துவிட்டு மஞ்சத்திற் படுத்து உறங்கலானேன். அயர்ந்த நித்திரையில் நான் ஆழ்ந்திருந்தபோது, வீட்டின் தெருவாயிற் கதவை யாரோ தட்டுவதுபோன்ற ஒரு சத்தம் என்னுடைய காதில் விழுந்தது. உடனே திடுக்கிட்டு விழித்துக்கொண்டு, எழுந்து சென்று கதவைத் திறந்தேன். கையில் ஒரு மெழுகுவர்த்தி விளக்குடன் வேதவதி நின்றாள். அவள் வந்தபோது மணி இரண்டுக்கு மேல் இருக்கும். அவளைக் கண்டவுடன் நான், நடுநிசியில் அவள் தனித்து வந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமும் அச்சமும் ஒருங்கு கொண்டவனாய், "வேதவதியே! இந்நேரத்தில் நீ தனித்துவரக் காரணம் யாது? " என்று வினவினேன்.

"ஆத்மநாதரே! நான் அவசரகாரியமாய் உம்மிடம் வந்தேன்" என்று வேதவதி சொல்லிக்கொண்டே, "இன்னமும் நான் தனியாக இருப்பது அவளுடைய குற்றமன்று" என்பதை நான் அறிந்துகொள்ளும் விதமாய் ஒரு கடைக்கண் பார்வையை என்மீது செலுத்தினாள்.

"அவசரகாரியமா? என்ன சங்கதி? விவரமாய்ச் சொல்" என்று நான் பரபரப்புடன் கேட்டேன்.

"வைத்தியரே! குலாம்காதிறு மரணாவஸ்தையிலிருக்கிறார். அவர் உம்முடைய விரோதியா யிருந்தபோதிலும், இச்சமயம் நீரே அவரைக் காத்தல் வேண்டும். நன்றாய்ப் பேசிக்கொண்டிருந்தவர், திடீரென்று ஏதோ ஒருவகை மயக்கத்தினால் சாய்ந்துவிட்டார். உடம்பு சில்லென்று குளிர்ந்துவிட்டது. பேச்சுமில்லை; மூச்சுமில்லை; நீர்தான் சிகிச்சை செய்து அவரைக் காத்தல் வேண்டும். ஆதலால் தயைசெய்து என்னுடன் இப்போதே தாமதியாமல் வாரும்" என்று வேதவதி பரிதாபத்தோடு கூறினாள்.

"விரோதியேயாயினும், ஆபத்துக்காலத்தில் உதவிசெய்யவேண்டியது கடமை" என்று நினைத்து நான் வேதவதியுடன் குலாம்காதிறுவின் வீட்டுக்குச் சென்றேன்.

குலாம்காதிறு படுத்திருந்த அறைக்குள் சென்று அவரையும் அந்த அறையையும் சுற்றி ஒருமுறை பார்த்தவுடனேயே, என்னுடைய சிகிச்சை பயன்படாதென்பதை நான் இனிதறிந்துகொண்டேன். சுமார் ஒரு வருஷத்திற்கு முன்பு தன்னுடைய அருமை மனைவியை இழந்து, அவளுடைய மரணத்தால் அதுமுதல் மிக வருந்தியவரும், அந்த மரணத்தை இப்போது தாம் அடையும் நிலைமையில் படுக்கையில் கிடப்பவருமான நோயாளியைச் சுற்றி, அவருடைய புத்திரர்கள் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். மூத்த புத்திரனுக்குச் சுமார் பதினைந்து வயதிருக்கும். கடைசிப் புத்திரனுக்குச் சுமார் நான்கு வயதிருக்கும்.

இதற்கிடையில் திருச்சி மலைக்கோட்டையிலிருப்பவரும், குலாம்காதிறுக்கு ஏதோ ஒரு வகையில் உறவினருமான **மகம்மதாலி** என்பவர் குலாம் காதிறுவின் குழந்தைகளைத் தம் வீட்டிற்கு அழைத்துப் போய் அவர்களைத் தாமே காப்பாற்றுவதாக ஒப்புக்கொண்டார். இவர் நுட்ப மதியும் உயர்ந்த கல்வியும் வாய்ந்தவரல்லராயினும், மகமதியர்களுக்குள் ஆங்கிலம் படித்து உயர்தரப்பரிட்சையில் தேறுகிறவர்கள் அதிக மில்லை என்பதையும் பொதுவாகவே மழுங்கிய மதியுடையவர்களெனப்பலரால் கருதப்படும் அவ்வகுப்பினருள் சிலர் உயர்ந்தகல்வியில் தேறினால் அவர்களுக்கு இந்துகளைக் காட்டினும் அதிகமான சர்க்கம் புரியவேண்டியது முறை என்பதையும் கருதித் துரைத்தனத்தார் இவருக்கு ஒரு மாஜிஸ்டிரேட்' உத்தியோகம் கொடுத்திருந்தார்கள். இந்த மாஜிஸ்டிரேட் வீட்டில் குலாம்காதிறுவின் புத்திரர்களும் புத்திரியும் வளர்ந்து வந்தார்கள்.

மூன்றும் அதிகாரம்.

கன்னிகையாற் கருத்தழிதல்.

> "விழியே களிவண்டு மென்னகையே தாது
> மொழியே முருதுலாந் தேறல்—பொழிகின்ற
> தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
> தாமரையென் னுள்ளத் தடத்து"

ஆ! என்னே காலத்தின் மாறுதல்! இடைவிடாமல் சுழன்றுகொண்டிருக்கும் காலசக்கரம், புறப்பொருளாகிய பிரபஞ்சத்தில் நிமிஷத்திற்கு நிமிஷம் எண்ணிறந்த மாறுதல்களை உண்டாக்குவதுபோலவே, அகப்பிரபஞ்சமாகிய மனிதன் மனத்திலும் கணத்திற்குக் கணம் எண்ணிறந்த மாறுதல்களை உண்டாக்குகிறதென்றால், அதன் ஆற்றலை என்னென்றுரைப்பது? மனிதன் மனதில் ஒருசமயம் கோபமும், இன்னொரு சமயம் அன்பும், மற்றொரு சமயம் காதலும், வேறோர் சமயம் பகைமையும் ஜனிப்பதற்குக் காரணம் காலமே யானால் அக்காலத்தின் செயலால் வெளிப்பிரபஞ்சத்தில் மழைபெய்தல் ஓர் காலமும், வெயிலெறித்தல் ஓர் காலமும், பனி பொழிதல் ஓர் காலமும், இலையுதிர்தல் ஓர் காலமும், மரந்தழைதல் ஓர் காலமுமாகப் பலவகையான மாறுதல் நிகழ்வது ஓர் வியப்பாமோ? ஆ! என்னுடைய மனம், சிலவருஷ காலங்களுக்குள் எத்தகைய மாறுதலடைந்துவிட்டது? சிவப்பிரகாசம் காதலைப்பற்றி எனக்கு அப்போதுசெய்த உபந்யாசத்தின் அருமையை இப்போதுதான் ஒருவாறு நான் உணரஆரம்பித்தேன். 'அன்பு' என்பதும் 'காதல்' என்பதும் வெறுஞ்சொற்கள் என்றும், சரீரத்தில் அளவுக்கு மிஞ்சி இரத்தம் அதிகரிப்பதனால், அவயவங்களுக்கு ஏற்படும் நிலைபிறழ்வைத் தடுப்பதற்கு ஒரு சாதன

மாக இருக்கும் சிற்றின்பத்திற்கு மனிதன் அடிமையாகும் அவசரத்தில், பெண்களிடம் அவன்வைக்கும் பற்றுதலே "அன்பு" "காதல்" என்று புகழ்ந்துரைக்கப்படுகிறதே தவிர வேறில்லையென்றும் இதுவரையில் கருதிவந்த நான்! இப்போது வேறுவிதமான அபிப்பிராயங் கொண்டேன்.

எனக்குச் சிறந்த புகழும், ஏராளமான பொருளும், அளவுக்கு அதிகமான மதிப்பும், கௌரவமும் இப்போது இவ்வுலகத்தில் வாய்த்துவிட்டன. ஆனால், இவைகளை அடைந்தும் என்மனம் திருப்தியடையவில்லை. தனியாக நான் இவ்வுலகத்தில் இருக்கிறவரையில் இவையிருந்தும், இல்லாதனவேயாம் என்றும், மனதிற் கியைந்த மங்கைநல்லாள் ஒருத்தியை மணந்து அவளுடன் கலந்துவாழ்வதே என் மனக்குறையைத் தீர்க்கும் என்றும், நான் கருதினேன். அதிகம் சொல்லுவானேன்? விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்னும் ஆவல் என்மனதில் வேரூன்றிப் பதிந்துவிட்டது.

"எவ்விதமான பெண்ணை விவாகம் செய்துகொள்வது? என்னும் எண்ணம் என் மனத்தில் உதித்தது. இக்காலத்தில் விவாகம் பலஜாதியாருள் பலவிதமாய் நடைபெறுகிறது. பிராமணர்கள் எந்த மங்கை அதிகமான பணம் கொடுக்கின்றாளோ அந்த மங்கையை மணப்பதுவே பொருத்தமானதென்று கருதி அவ்விதமே செய்து வருகிகிறார்கள். அவர்களுக்குள் விவாகமும், சதிபதிகளின் அன்பும், பெண்வீட்டார் புருஷனுக்குக் கொடுக்கும் வரதட்சணையைப் பொறுத்ததா யிருக்கின்றன. மற்ற ஜாதியார்களோ பணத்தையும், குலத்தையும், முக்கியமாகக் கருதி விவாகம் செய்கிறார்கள். நூறு வயதுள்ள வயோதிகனு யிருந்த போதிலும், ஆயிரம் ரூபாவுக்கு நகை போடக்கூடியவனு யிருந்தால், பதினாறு வயதுள்ள இளமங்கையர்களைச்சிறிதும் மனங்கூசாமல் அவனுக்கு மணம் புரிவிக்கும் பெற்றோர்கள் பலர் இருக்கின்றார்கள்! பெண் அழகிற் சிறந்தவளாயிருந்தால், குலத்தையும் குணத்தையும் கவனியாமல் ஆயிரக்கணக்கான ரூபாயைக் கொடுத்து அவளை விவாகம் செய்துகொள்ள விரும்பும் வாலிபர்களும் இக்காலத்தில் இருக்கிறார்கள்! ஆனால் நான் இத்தகைய விவாகங்களை விரும்பவில்லை. பெருந் தனவந்தன் வீட்டுப் பெண்ணினை மணக்கவேண்டு மென்பது என்னுடைய கொள்கை யன்று,—ஏனெனில், போதுமான பொருளும் வருவாயும் எனக்கிருந்தமையால், தனவந்தன் வீட்டுப் பெண்ணை விவாகம் செய்துவிட்டு அவளுடைய அதிகாரத்திற்கும் ஆக்கினைக்கும் உட்பட்டு நடக்கவேண்டிய அவசியம் எனக்கில்லை,—அவ்விதம் செய்வதற்கு என்னுடைய சுதந்தர உணர்ச்சி இடங்கொடுக்கவுமில்லை. அழகில் மாத்திரம் மிகச்சிறந்த பெண்ணை விவாகம் செய்யவேண்டு மென்பதும் என்னுடைய நோக்கமன்று. ஏனெனில், 'அழகு' என்னும் நீடித்திரா தென்பதை

வஸ்தையில் அவ்வளவு ஆத்திரத்துடன் என்னை நிந்தித்துப் பேசியதானது எனக்கு வருத்தத்தையும் அச்சத்தையுமே விளைவித்தது. இப்போது நினைத் தாலும் என் உடல் நடுங்குகிறது.

குலாம்காதிறு வைத்தியத் தொழிலினால் ஏராளமாய்ச் சம்பாதித்திருப்பார் என்றே ஜனங்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் அவர் இறந்தபிறகே உண்மை வெளியாயிற்று. "செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு" என்னும் பழ மொழிக்கு அவர் ஒரு உதாரணமானார். மாதம் ஒன்றிற்கு இருநூறு ரூபாய்க்குமேல் அவருக்கு வரும்படி வந்தும், இறந்தபோது ஆயிரம் ரூபாய் அவருக் குக் கடன் இருந்ததென்றால், யாருக்குத்தான் வியப்புண்டாகாது? இக்காலத் தில் இத்தகைய சம்பவம் சர்வ சாதாரணமாயிருக்கிறது. ஏராளமான வரும்படி யிருந்தும், தரித்திரம் சிலரைவிட்டு நீங்குவதே இல்லை. இதற்குக் காரணம் என்னவென்று ஆழ்ந்து யோசிக்கும்போது, நல்லவழியில் பொருளீட்டாமல் பிறரை முகஸ்துதி செய்தும், செய்யத்தகாத கேவலமான தொழில்களை இயற்றியும், பிறர் பொருளை அபகரித்தும், பொதுநன்மைக்காகப் பாடுபடுவதாய் வேடம்பூண்டு அதற்காக வரும் பொருளைச் சுயப்பிரயோஜனப் படுத்தியும் உல கத்தாரை வஞ்சித்துப் பொருளீட்டுவதுதான் என்பது இனிது புலப்படுகிறது. குலாம்காதிறு 'மனோவசியம், யோகக்காட்சி' என்னும் இத்தகைய அமா னுஷிகமான சக்திகள் நிரம்ப வாய்ந்தவனைப்போல் நடித்துப் பொதுஜனங்களை வஞ்சித்துப் பொருளீட்டினான். ஆகவே எந்தவழியாக அவனுக்குப் பொருள் வந்ததோ அந்தவழியாகவே அது சென்றுவிட்டது.

குலாம்காதிறுவைப் போன்ற குணவிசேஷமுடைய மனிதர்கள் பலர் இக் காலத்தில் இல்லாமலில்லை. எத்தனையோ மனிதர்கள்—பண்டிதர்கள் என்றும், வித்துவான்கள் என்றும், புலவர்கள் என்றும், பத்திராதிபர்கள் என்றும் பெயர் வைத்துக் கொண்டு, தங்கள் கல்விக்குத் தகுந்த சிறந்த குணம் ஒரு சிறிது மின்றித் தாசிகள் வீட்டே கதியென்றும், பெரிய பிரபுக்களுக்கும் ஜமீன்தாரர்க ளுக்கும் பரத்தையர்களைக் (சமயம் வாய்த்தால் குலஸ்திரீகளையும்) கூட்டுறவு செய்து வைப்பதே மேலான தொழிலென்றும், பிறர் தம்மிடம் அடைக்கல மாக வைத்த பொருளைச் சமயம் பார்த்து அபகரிப்பதே உயர்ந்த செயலென் றும், ஊரார் சொத்திற்குப் பேயாய்ப்பறந்து எந்த வகையினாலாவது அச்சொத் தை அடைய வேண்டுவதே ஜென்மம் எடுத்ததின் பலன் என்றும் நினைத்து நடப்பவர்களும், அவ்விதம் நடப்பதால் உலகத்தாருக்கு அருவருப்பை விளை விப்பவர்களும், 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் கற்றுமறிவில் லாத வென் கன்மத்தையென்சொல்கேன்' என்னும் ஸ்ரீ தாயுமானவர் அருமைத் திருவாக்கை மெய்ப்படுத்துகிறவர்களுமான எத்தனையோ மனிதர்கள்,—மான த்தையும் தற்பெருமையையும் அடியோடு ஒழித்துவிட்டுப் பொதுஜன நன்மை

க்காகப் புத்தகசாலை ஏற்படுத்துவதாயும், வாசக சாலை ஸ்தாபிப்பதாயும், பத்திரிகை நடத்துவதாயும் தேசத்திலுள்ள பெரிய பிரபுக்களிடத்திலும், ஜமீன்தாரர்களிடத்திலும், சிற்றரசர்களிடத்திலும், மடாதிபதிகளிடத்திலும் கூறித் தங்கள் பல்லெல்லாந் தெரியக் காட்டி யாசித்துப் பொருள் கவர்கின்றார்கள். இவ்விதம் ஈட்டுவது போதாதென்று வாழ்த்துக் கவிபாடியும், இரங்கற்பாக்கள் இயற்றியும் பணம் சம்பாதிக்கின்றார்கள். இப்படிப் பல வகையில் கிடைக்கும் பொருள்களைத் தாங்களே சுயப்பிரயோஜனப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இறுதியில் அவர்களுடைய நிலைமையைக் கவனிப்போமானால், மிகவும் பரிதபிக்கத் தகுந்ததாயிருக்கிறது. தரித்திரம் அவர்களிடமே குடியிருக்கிறது. பிரதிதினமும் கடன்காரர்களின் நிர்ப்பந்தமும், நியாயஸ்தலத்தாரின் 'சம்மனும்' 'வாரண்டும்' அவர்களைச் சூழ்ந்து கொண்டே யிருக்கின்றன. பொது நன்மைக்காக அவர்கள் வசூல் செய்த பணம் யாதாயிற்றென்பதை ஈசனே அறிவார்! அவர்கள் ஏற்படுத்திய புத்தக சாலையில் புத்தகங்கள் இரா; ஸ்தாபித்த வாசக சாலையில் தெருப்புழுதியும் வெளவால் புழுக்கையுமே இருக்கும்; நடத்தும் பத்திரிகையோ, சூரிய கிரகண சந்திர கிரகணங்கள் ஒருவருஷத்தில் அபூர்வமாகத் தோன்றுதல் போல அபூர்வமாகவே வெளியாகும்,—**அதுவும் பெரும் பொருளுதவி செய்கிறவர்கள் வீட்டில் ஏதாவது ஒரு விசேஷம் நேர்ந்தால்** இவ்வளவு பெரும் பொருள் இவர்களுக்கு வந்தும் இவர்கள் தரித்திரத்தால் பீடிக்கப்படுவதற்கு என்ன காரணம்? **'பிறரை மோசம் செய்யும் கெட்ட எண்ணமே'** காரணம்!

இத்தகைய கற்றறிமூடர்களுள் குலாம்காதிறுவும் ஒருவனே யாதலால் இறந்தபோது அவன் தன் குடும்பத்தைத் தரித்திர ஸ்திதியில் விட்டுப்போனது ஒரு அதிசயமாகாது.

ஆனால் அவன் குடும்பத்தை நோக்கியபோது எனக்குச்சிறிது அனுதாபம் உண்டாயிற்று. மரணவஸ்தையில் அவன் இருந்தபோது அவனுடைய புத்திரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு வாய்விட்டுக் கதறிய காட்சி என் கண் முன் அடிக்கடிதோன்றும். அவனுடைய பெண் குழந்தை மிகுந்த வருத்தத்துடன் அன்று பிரலாபித்த அழுகுரலோசை அடிக்கடி என் செவியில் நுழைவது போல் எனக்குத் தோன்றும். ஆகவே நான் அவனுடைய குடும்பத்தாருக்குச் சிறிது பொருளுதவி செய்து சுமார் இரண்டு மூன்று மாதம் அவர்களை ஆதரித்து வந்தேன்.

குலாம்காதிறுவின் மாளிகையைப் பொதுஜன நன்மை புரிவதில் பெரிதும் விருப்பமுடைய ஒரு கனவான் விலைக்கு வாங்கி விட்டார்.

யாகிய சிற்றின்பச் சிறுசுகமும் ஒரு சாதனமாய் இருத்தலால், ஆண் பெண்க ளுக்குள் ஏற்படும் அன்புரிமை மிகப் பரிசுத்தமானதாகவும் சிறந்ததாகவும் கரு தப்படுகிறது. இந்த அன்புரிமையே "காதல்" என்று புகழ்ந்து பாராட்டப் படுகிறது. உண்மையான காதலனுக்குள்ளும் காதலிக்குள்ளும் எத்தகைய வேற்றுமையும் காணப்படமாட்டாது. அவர்கள் இரண்டு உடலில் வசிக்கும் ஒரே உயிர் போன்றவர்கள். உடம்பும் உயிரும் வேறுயினும் உடம்புக்கு உறு துயர் உயிரால் உணரப்பட்டும், உயிரின் இச்சைவழி உடல் இயக்கப்பட்டும் ஒன் றுக்கொன்று பேதந் தோன்ருவாறு உடம்பும் உயிரும் ஒன்றேயாய் நிற்றல் போல், உண்மை அன்புபாராட்டும் காதலனும் காதலியும் எல்லா விஷயங்களி லும் எக்காலத்தும் ஒரே மனத்துடன் விளங்குவார்கள். இவ்விதம் பாராட்டப் படும் அன்பே,—அதாவது ஒருவனும் ஒருத்தியும் என்றும் ஒரே தன்மையாய் அன்பைத்தவிர வேறு காரணங்கருதி நேசியாது அன்பிற்காகவே அன்பு செலு த்தும் அன்பே,—பரிசுத்தமான உண்மைக் காதலாம்; அதுவே மனிதர்களு க்கு இவ்வுலகத்தில் வாய்க்கக் கூடிய இன்பத்துட்சிறந்த பேரின்பமாம். என்று சிவப்பிரகாசம் என்னை நோக்கி ஒரு நாள் கூறினர்.

அவர் கூறிய விஷயங்கள் என்னுடைய அறிவுக்கு அப்பாற்பட்டவைக ளாயும், என்னுடைய அங்கீகாரத்தைப் பெறுதற்கு யோக்கியதை அற்றவைக ளாயும் இருந்தன. ஏனெனில் "கடவுள் ஒருவர் உண்டு" என்னும் கொள் கையில் நம்பிக்கை எனக்குச் சிறிதுமில்லை. "ஆன்மா என்பது ஒன்றுண்டு" என்பது என்னுடைய சித்தாந்தமன்று. "கொண்டதே கோலம் கண்டதே காட்சி" என்று வாதிக்கும் உலகாயதக் கொள்கையை நான் உடையவன். அதிகம் சொல்லுவானேன்? "கடவுள் இல்லை; ஆன்மா இல்லை; முற்பிறவி பிற்பிறவி இல்லை; நல்வினை தீவினை இல்லை; மோட்ச நரகமில்லை; இவ்வுல கத்தில் வயிரு உண்டு, உடலார உடுத்து, மனமாரச் சுகிக்கவேண்டுவதே கடமை; பிரபஞ்சத்தைத் தவிர வேறு பிர்மம் இல்லை" என்னும் இத்தகைய கொள்கைகள் என் மனத்தில் வேரூன்றிப் பதிந்துவிட்டன. இத்தகைய கொள் கைகளையுடைய என்னை நோக்கிக் கடவுளைப் பற்றியும், ஆன்மாவைப் பற்றி யும், பேரின்பப் பெருஞ்சுகத்தைப் பற்றியும், அன்பைப் பற்றியும், காதலைப் பற்றியும் சிவப்பிரகாசம் வாசாமகோசாமாய்ப் பேசினல், அவருடைய உபதே சங்கள் என் செவியில் நுழையுமா? "செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கம்" போல் அவருடைய உபதேசமும், "நாய்வாலைக் குணக்கெடுக்க" முயன்றது போல் அவருடைய முயற்சியும் என்விஷயத்தில் பயன் பயவா தொழிந்தன.

செல்வப் பெருக்கும், நாகரிக விருத்தியும், கல்விச் சிறப்பும் இனிது வாய்ந்த திரிசிரபுரத்தில் நான் ஒரு வைத்தியனுக 1898-ம் வருஷத்தில் அமர்ந் தேன். நான் மிக இளம்பருவத்தினனுயினும் வைத்தியத் தொழிலில் எனக்

ளுச் சொற்பமான அனுபவமும் அதிகமான கைராசியும் உண்டாதலால், தென் ஜில்லாக்களில் எனக்கு மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் உண்டென்பதை என்னுடைய விரோதிகளும் மறுக்கமுடியாது. ஸ்காத்லாந்து தேசத்திலுள்ள எடிம்பரோ நகரிலும், பிரான்ஸ்தேசத்தின் தலைநகராகிய பாரிஸ் பட்டணத்திலுமுள்ளபிரக்யாதிபெற்ற வைத்தியவித்தியாசாலைகளில் படித்துப்பரீட்சையில் தேறி உயர்தரப்பட்டங்களை நான் பெற்றிருந்தபடியால், ஆங்கில வைத்தியர்கள் கூட என்னைப் புகழ்ந்து பாராட்டுவார்கள். உண்மையைக் கூறுமிடத்து; வைத்தியத்தொழிலில் எனக்கு நல்ல ஞானமுண்டு; பிரக்யாதியுமுண்டு.

வைத்தியகலாசாலைகளில் என்னுடைய படிப்பு முடிந்தவுடன், சென்னை நகரில் ஒரு வைத்தியசாலை ஸ்தாபித்துத் தொழில் புரிவதற்கு நான் ஆதியில் தீர்மானித்திருந்தேன். ஆனல், மனிதன் தான் நினைப்பதுபோல் ஒரு காரியத்தைச் செய்துமுடிப்பதற்கு முயலும்போது, அம்முயற்சியைப் பயனற்றதாகச் செய்து, வேறு வகையில் அவனை அவனறியாமலே முயலும்படி செய்கின்ற "விதிவலி" என்பது ஒன்று தனியாக இருக்கிறதன்றோ; அந்த விதியானது முதலிற் செய்யப்பட்ட என்னுடைய தீர்மானத்தை அடியோடு மாற்றிவிட்டது. அத்தகைய மாறுதல் ஏற்படுவதற்குச் சாதகமான எதிர்பாராத சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது. அதாவது, திரிசிரபுரத்திற்கு என்னுடைய சொந்த விஷயம் ஒன்றைக் குறித்துப் போக நேர்ந்தபோது, அங்குள்ள ஒரு சத்திரத்தில் வயோதிகர் ஒருவர் நோயினல் வருந்திக் கூக்குரலிடும் சத்தம் என்னுடைய காதில் விழுந்தது. நான் உடனே அந்தச் சத்திரத்திற்குச் சென்று நோயாளியைப் பார்த்தேன். அவர் ஒரு பிரயாணியைப்போல் காணப்பட்டார். அவருக்கு வயது அறுபதாம் வருஷத்தின் அப்புறம் இருக்குமென்றே யாரும் சொல்லுவார்கள். அவர் மூடக்குவாதத்தினல் பெரிதும் பிரலாபித்துக்கொண்டிருந்தார். நான் அந்தச் சத்திரத்திலேயே சுமார் ஒரு வாரம் வரையில் தங்கியிருந்து அவருக்கு வேண்டிய சிகிச்சைகளை மிகுந்த ஜாக்கிரதையுடனும் ஊக்கத்துடனும் செய்துவந்தேன். இறுதியில் அவர் பூரணகுணமடைந்தார். அவரைப்பற்றிப் பிறகு விசாரித்தபோது திருச்சியில் பிரக்யாதிபெற்ற ஒரு வைத்தியர் என்றும், அவருடைய பெயர் சிவப்பிரகாசம் என்றும் நான் அறியலானேன். அவருக்கு உற்றாருமில்லை; உறவினருமில்லை. "இந்த உலகத்தில் அவருக்குத் துணை அவர்தான்" என்று சொல்லும்படியான நிலைமையில் அவர் இருந்தார். ஆனல், வைத்தியத்தொழிலினல் சம்பாதித்த பெரும்பொருள்,—சுமார் இரண்டு லட்சம் ரூபாய்க்குமேல்,—அவர்வச மிருந்தது. அவருக்கு என்னிடம் மிகுந்த அன்பு எக்காரணம்பற்றியோ ஏற்பட்டுவிட்டது. அவருடைய ஆஸ்தியை எனக்கே உரிமையாக்கி விடுவதாகவும், அவருடைய வீட்டிலேயே என்னை இருக்கும்படியாகவும் அவர்கூறி, என்னைக்கட்டாயப்படுத்தினர். ஆகவே திருச்சிராப்பள்ளியிலேயே நான் வசிக்கும்படியான சந்தர்ப்பம் நேர்ந்தது.

பாடினார்கள். இன்னும் மற்ற சிறுவர்களெல்லாம் ஒருங்கே சிவநாமாவளி பாடினார்கள்; அதன்மேல் சுப்பய்யாவென்பவனும் நடேசன் என்பவனும் மங்களம் பாடினார்கள்; இடை இடையே சபையார்கள் (கரகோஷம்) களிப்பைக் காட்டினார்கள். மாணவர்கள் உபந்யாசம் பூர்த்தியானவுடன் அவர்கட்குப் பல வகைச் சிற்றுண்டிகளை வழங்கினார்கள்.

(இல) நண்பா! இவ்வளவோடு சபை பூர்த்தியாய் விட்டதா? அப்போது மணி என்ன இருக்கலாம்?

(கோ) நேயனே! அப்பொழுது மணி 5—20 இருக்கலாம் அக்கிராசனாதிபதியவர்கள் மேலே சொல்லப் போகிறவர்களை உபந்யசிக்க விரும்பினார்கள்.

(இல) அவர்கள் யாவர்? அவர்கள் உபந்யசித்த விஷயங்கள் யாவை? கூடியவரையில் சிறிது விளக்கமாகவே சொல்ல வேண்டுகிறேன்.

(கோ) அன்பனே! அவர்கள் பேசியவைகளை நான் சொல்லுந் திறமையுடையவனாக விருந்தால் அவர்களோடு நானும் உபந்யசித்திருப்பேனே, ஆனாலும் அவர்கள் பேசிய கருத்தை மாத்திரம் உனக்கு விளங்கச் சொல்லுகிறேன்கேள். "ஸ்ரீ பழ. சா. மு. இலக்குமணச் செட்டியாரவர்கள்" கல்வியைப்பற்றி அனேகம் உதாரணங்களோடு வெகு அழகாயுபந்யசித்தார்கள். இங்கிலீஷை நமது வர்த்தகமுறைமைக்கு வேண்டிய அளவு கற்பித்தல்போதும், தமிழை நன்கு பூர்ணமாகக் கற்பிக்கவேண்டும், வித்தியாசாலையோடு ஒரு சபையும் ஏற்படுத்த வேண்டுவது அவசியமானது என்று மெல்லிய குரலோடு நல்லிசையுடன் உபந்யசித்தார்கள். அதன்பிறகு ஸ்ரீ பி. கு. நா. சித. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் கல்வியின் பயன் என்ற விஷயத்தை அநேக மேற்கோள்களுடன் கற்றோர் பெருமையும் கல்லாதார் சிறுமையும் விளக்கிக்காட்டிப் பிள்ளையைத் தந்தை படிப்பிப்பதிலே முயற்சி எடுத்துப் பாதுகாக்கவேண்டுமென்றும் நன்கு உபந்யசித்ததோடு நமது வித்யாசாலையில் இங்கிலீஷ் தமிழ்ப்பத்திரிகைகளைச் சேகரித்து மாணவர்களைப் படித்துவரச்செய்யவேண்டும், அன்றியும் தமிழ்ப் பாடத்துக்கு ஸ்ரீ நாவலரவர்கள் பாலபாடமும், இலக்கணங்களும் சங்கத்து நீதி நூல்களும் கற்பிக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினார்கள். அதின்மேல் சம்புகேஸ்வரம் ஸ்ரீ சோமசுந்தர தேசிகரவர்கள் கடவுள் வழிபாடு என்பதை சாத்திரோக்தமாக இசையோடு சொன்னார்கள். அதின்பிறகு இராங்கோன் "சமரசஞான சன்மார்க்க சபை"த் தலைவரும், சிக்கந்திரபாக்கம் "சித்தாந்த ஞானயோக சங்க"த்தாபகரும், சித்தாந்தஞான நிஷ்டரும், பன்னிருதிருமுறைத்திரட்டோடு திருவாசக விஷய சூசனம் எழுதி வெளியிட்டவருமாகிய "ஸ்ரீமத் சிவ. அருணகிரி முதலியாரவர்கள்" கல்வி கற்றற்குரியகாலம் கற்கு முறை கற்பவர் ஒழுக்கம்முதலாய இன்னும் பலஅரிய விஷயங்களையும், திருக்குறள் மேற்கோள்காட்டிக் கேட்டோர் மகிழப்பேசினார்கள். அன்றியும் சிவ

தருமத்துக்கும் சிவ மதத்திற்கும் ஒரு சாதி முழுதும் ஈடுபட்டிருப்பவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தாரைத் தவிர வேறு யாமையும் எவராலும் சொல்லமுடியாதென்று பலமுறை கூறினார்கள். மேலும் உபந்யசித்த சிறுவர்கட்கு சிற்சில நீதி மொழிகளைச் சொல்லிவிட்டு நமது வித்தியாசாலை உபாத்தியாயர்கள் திறமையைப்பற்றியும் விஸ்தரித்துப் பேசினார்கள். இதன்மேல் புத்தக நிலையம் ஒன்று ஸ்தாபிக்கவேண்டியது முக்கியமானது என்று சபையோர் மனம் ரமிக்க நீண்டநேரம் உபந்யசித்தார்கள்.

(இல) நண்பா! நீ சொல்வதைக் கேட்கக்கேட்கப் பரமானந்தமாயிருக்கிறதே. வேறு யாருடைய உபந்யாசங்கள் நடந்தன? அவற்றையும் கேட்கப்பேராசை யடைகிறேன்.

(கோ) அன்பனே! அவ்வளவில் மணி 6-40 ஆய்விட்டது. அக்கிராசனாதிபதியவர்கள், உபந்யாசித்தவர்கள் உபந்யாச நயத்தையும் வித்யாசாலைச் சிறுவர்கள் பேசிய திறமையையும் விஸ்தரித்து வியந்துபேசியும், மேலே உபந்யாசித்தவர்கள் கலாசாலைக்கு உபகரணமாய் வேண்டுமென்று கூறினவைகளை தனிக்கூட்டத்தில் நகரத்தாரோடு யோசித்து செய்யக்கூடுமென்றும், வித்தியாசாலை மாணவர்களைச் சமீப காலத்தில் பரீக்ஷித்து நன்கு படித்த பிள்ளைகளுக்குப்பரிசு கொடுக்களண்ணங்கொண்டிருப்பதாயும், இக்கலாசாலைக்கு நாட்டுப்புறத்துநகரத்தார்களிடம் முன் சேகரித்த பொருளிருக்க மீதியாயுள்ள ஊர்களிலும் நகரத்தார்கள் மன ஊக்கத்தோடு நிதி சேகரிக்க முயற்சிக்கவேண்டுமென்றும் வெகு அழகாய் முடிவுரை கூறி முடித்தார்கள்.

(இல) மேல்கூறி வந்ததோடு சபை பூர்த்தியாயினதா?

(கோ) பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் சபையாருக்கு நன்றிகூறினார்கள். உடனே அக்கிராசனாதியவர்கள் பிரதம உபாத்தியாயர் பிர்ம்மஸ்ரீ இராமநாத ஐயர் உ-வது ௩-வது உபாத்தியாயர்களான ஸ்ரீ கூத்தப்பெருமாள் பிள்ளை, ஸ்ரீ இராமச்சந்திர இராவுத்து, சிவ அருணகிரி முதலியார், ஸ்ரீ சோமசுந்தர தேசிகர் இவர்களுக்கு முறையே பூமாலை புனைந்தார்கள். சபையார் அனைவருக்கும் மாணவர்களுக்கும் சிற்றுண்டியும் சந்தன தாம்பூலாதிகளும் உதவி உபசரிப்பு நடந்தது. மாணவர்கள் விபூதிப் பிரசாதம் பெற்றுக்கொண்டு 7-மணிக்கு வித்யாசாலைக்கு விஜயஞ்செய்தார்கள். இவ்வளவு மங்களமாக வருஷ பூர்த்திக் கொண்டாட்டம் நிறைவேறியது.

(இல) நண்பா! இன்றைய பிற்பகல் வெகு குதூகலமாயிருந்தது. உன் இடக்கரத்தில் இருப்பது யாது? என்னோடு பேசும்பொழுதுகூட உன் கண் அதினிடமாகவே சென்றுகொண்டிருக்கின்றதே. ஏதேனும் விசேஷமுண்டோ?

(கோ) நண்ப! இதை நீ யறியாயா? இது தான் "நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமோ" என சுவாமிவேதாசலமென்பவரால் வெளியிடப்பட்ட வியாசத்தைத் தாங்கிவந்திருக்கும் நமது "வைசியமித்திரன் பத்திரிகை."

(இல) நண்ப! நீ சொல்லும் வியாசத்தின் பெயரைக் கேட்கும்போதே வெகு விபரீதமாயிருக்கின்றதே. சுவாமிவேதாசலம் நம்மவர் செய்யுந் தர்மங்கள் பயன்படாவென்பதற்கு என்ன திருட்டாந்தங் காண்பித்துள்ளார்? எங்கே அதைப் படி, கேட்கலாம்.

(கோ) நாம் வந்து வெகுநேரமாகிவிட்டது, ஆனால் சிலவற்றைச் சொல்லு கிறேன் கேள். இங்கிலீஷ் படிப்பு மிகுந்து தமிழ்ப் படிப்புக்குறைந்த இக்கா லத்தில் சிவன் கோவில்களை போட்டிபோட்டுக் கட்டுவதினால் என்ன பயன் உண்டாகும்? வரவு, செலவு, என்றதைக் கூடச் சரியா எழுதத்தெரியாதவர்கள் எப்படி கோவிலின் இலக்கணங்களை யறிவார்கள்? அவர்கட்கு உதவியாக வித் தியாசாலை முதலான முக்கிய தருமங்களில் ஒன்றும் செய்யவில்லை என்று எழுதியிருக்கிறார். ஆனால் முழுதையும் நீயே படித்துப் பார்த்துக்கொள். இதோ இரண்டு பத்திரிகைகள். தவற விட்டுவிடாதே.

(இல) அன்ப! வேறொரு புத்தகம் வைத்திருக்கின்றனையே, அதிலும் விசேஷமிருக்கலாம்போல் காண்கிறது. ஒன்றுமில்லையாயின் அது உன் கையிலிருக்கமாட்டாதே.

(கோ) தோழனே! அதுவும் ஒரு மாதாந்தப் பத்திரிகைதான். அது மதுரை யிலிருந்து வெளிவரும் வித்தியாபாநு என்னும் பெயருடையது. மிக அரிய பெரிய விஷயங்களைத்தாங்கி வருவதாகும். இது தைமாதப் பத்திரிகை, இதில் சுவாமி வேதாசலம் நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமா வென எழுதிய வியாசத்திற்குப் பதிலாக அவர்கள் தருமமே மிக்க பயனுடையதென்று தக்க நியாயங்காட்டி வெளியிடப்பட்டிருக்கிறது.

(இல) தோழனே! வித்தியாபாநுவில் பயன்படுமென்றதற்கென்ன ஆதா ரங்காட்டுகின்றார்கள். நாம் வீட்டுக்குப் போக வேண்டிய திருப்பதால் சங்கிரக மாக அதையுங் கொஞ்சம் சொல்லிவிட்டால் என் மனந் திருப்தியா யிருக்கும்.

(கோ) அன்ப! வித்தியாபாநுப் பத்திராதிபரவர்கள் நாட்டுக்கோட்டையார் செய்து வருகின்ற பதி தருமம், பசு தருமமிரண்டையும் விளக்கிக் காட்டி, அத ற்கு வேண்டிய சிறந்த நூல்களின் உதாரணங்களையும் எழுதி யிருக்கின்றார்கள். நண்ப! நீ இதையுங் கூடவே வைத்துப் பார்த்துவிட்டுக் கொடு.

(இல) நண்ப! இரண்டு பத்திரிகையும் பார்த்திருக்கலாமே. உன் அபிப்பி ராய மென்னவா யிருக்கின்றது?

(கோ) நண்பனே! சுவாமியார் எழுதிய வியாசம் எப்படியிருப்பினும் என்ன நலம் பயப்பினும் சரியே. நம்மவர்கள் எத்தனையோ ஊர்களில் வித்யா சாலைகளும் சபைகளும் தாபனஞ் செய்து வருகின்ற இக்காலத்தில் செங்கல்லி லும் சுண்ணாம்பிலும் பொருளை யழித்துக் கோயிலைக் கட்டுவது இங்கே யாரு

க்கு வேண்டுமென்று எழுதி யிருப்பதைப் பார்த்தது முதல் என் மனம் படும் பாடு ஈசன் தான் அறிவான்.

(இல) அன்ப! நீ வருந்துவது என்ன வியப்பா யிருக்கின்றதே. சுவாமி வேதாசலமென்பவரை நாமறிந்திராவிட்டாலும் அவர்கள் பெயர் மாத்திரத்தாலே அவர்கள் மேதாவியாகத் தெரிவதால் கோவில் கட்டுவதிலும் அவர்கள்சொல்லிய தருமமே பயனுடையதென அவர்கள் கண்டிருக்கலாம். இல்லையாயின் அவர்கள் எழுதுவார்களா? நம்மவரே பத்திரிகைத் தலைவராயுள்ள வைசியமித்திரன் தாங்கிவருமா? ஒன்றையும் யோசியாமல் வருந்தலாமா? ஆயினும் இன்னும் தெரிந்தோர் பால் கேட்டுத் தெளியலாமே!

(கோ) நண்ப! நீ சொல்வது சரியே. ஆனால் அவர்களைப் போல் அரியபெரிய சித்தாந்த நூல்களை நாம் படித்திராவிட்டாலும் சிறுவயதில் பள்ளியில் படிக்கும்போதே **ஆலயந்தொழுவது சாலவு நன்று** எனப்படித்ததை மறந்துவிட்டாயா? அந்த நீதிவாக்கியம் வீண்தானோ? அதற்கு உரை கோவிலுக்குப் போய் சுவாமியை வணங்குவது மிக்க நல்லதென்றுதானே நாம் கேட்டிருக்கிறோம்.

(இல) நண்ப! இதைப்பற்றி ஏன் நாம் மனம் வருந்த வேண்டும்? நம்மவரில் எத்தனையோ சாத்திரம் படித்த அறிஞர்களிருக்கின்றார்கள். அவர்களெல்லாம் சுவாமிவேதாசலம் அவர்கள் வியாசத்தைக்கண்டியாது விடுவார்களா? கண்டனமென் றெழுதுவதையும் பார்க்கலாம். அன்றியும் கோவில்கட்டுவது புண்ணியந்தான் பயன்படுவதுதான் என்பதும் அல்ல வென்பதும் எல்லாம் வல்ல இறைவனன்றோ அறியவேண்டும். மற்றவர்கள் வேண்டுவதற்காகவும் வேண்டாததற்காகவும் நம்மவர் விடுவதில்லை. இந்த "சுவாமி" வேதாசலம் போன்றவர் கூறும் இத்தகைய வெற்றுரைகட்காக நாம் ஏன் கவலவேண்டும்? நீ மகிழ்வாயாக.

(கோ) நண்ப! நீ சொல்லியது தான் சரியான முடிவுரை. மணியோ 6 ஆகி விட்டது, வண்டியி லேறு, போய்விடுவோம்.

இங்ஙனம்.

தனவைசியன்.

381 373

உ

குமரன் றுணை.

நாட்டுக்கோட்டையாரைப்பற்றிய சில விசேடக்குறிப்புக்கள்.

நமது தமிழ் நாட்டில் வசிக்கும் பலவகைச் சாதியாருள் நாட்டுக்கோட்டை நகரத்தார் என்ற தனவைசிய குலத்தார்கள் பண்டைக்காலத்திலும் மேன்மையுற்றிருந்தவர்களென்பதும், வர்வர நாளுக்குநாள் மிக்க மேன்மைபெற்று வருகிறார்களென்பதும் அறிவுடையார் பலருமறிவர். இங்ஙனமாகவும் இவ்வகுப்பினரின் நிலையையுள்ளவாறுணராத சில போலிப்பண்டிதர்களும், போலிச்சாமியார்களும் தோன்றி இவர்கள்மீது ஏதேதோ தோஷாரோபஞ் செய்து வருகின்றனர். காய்த்த மர்த்தின்மீது கல்லேறு செல்லுதல்போன்று எல்லா நலங்களானுஞ் சிறந்து விளங்கும் இவ்வகுப்பினர் மீதே தூஷணாத்திரப் பிரயோகஞ்செய்ய வருகின்ற அறிவிலிகட்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தற்பொருட்டே இன்னவரைப்பற்றி யாம் அறிந்துள்ள பற்பல விசேடங்களில் ஒரு சிலவற்றை யிங்கே காட்டுவது அவசியமாகின்றது.

(1) நாட்டுக்கோட்டை நகரத்தாரின் பூர்வநிலை:—இவர்கள் ஆதியில் சோணாட்டிலே காவிரிப்பூம் பட்டினத்தில் "அறிவுடையொருவனை யரசனும் விரும்பும்" என்றதற்கிலக்காக அரசனால் மிக மதிக்கப்பெற்று வர்த்தக முறையிற் கைதேர்ந்து சத்திய சீலராக வாழ்ந்து வந்தனர். பின்னர் அவசியமான ஒரு காரணத்தால் பாண்டிநாட்டில் குடியேறித் தம்துபழமையான வர்த்தக முறையையே குலத்தொழிலாகக்கொண்டு வாழ்வாராயினர். பாண்டிநாட்டுள்ளும் வடகீழ்த்திசை மட்டுமே இவர்கள் வாழுமிடமாம். பண்டைக்காலப் புலவரொருவரியற்றிய குளுவநாடகம் என்ற நூலில் இவர்களது சிறப்பைப்பற்றிக் கூறுமிடத்தில் "காவிரியாற்றுப்பெருக்கைப் பஞ்சப்பொதியாலடைத்தவர்க"ளென்வும், "யானையைக் கண்ணாற் பார்த்து இது இவ்வளவு நிறையுள்ளது என்று சரியாகக்கூறினார்க"ளெனவும் மற்றும்பல விசேடங்களுஞ் சொல்லப்பட்டிருந்

தலை நோக்குங்கால் இவர்களது வியாபாரசம்பந்தமான செல்வப் பெருக்கத்தையும், இவர்களது அதிமதி நுட்பத்தையும் நன்கு தெரிந்து மெச்சாதாரு முண்டோ.

(2) தெய்வபக்தி மதாபிமானம்:—இவ்வகுப்பினர் யாவரும் சைவ மதத்தினர். இங்ஙனம் ஒரு ஜாதியார் எல்லாரும் ஒரே மதத்தினராயிருப்பது மிகவும் பாராட்டற்குரியது. இவர்களைத் தவிர வேறே எச்சாதியாரையும் இங்ஙனம் ஒரே மதத்தினராகக் காண முடியாது. விவாகமானவுடன் சிவ தீக்ஷைபெற்றுக்கொள்ளவேண்டு மென்பது இவ்வகுப்பினருள் முக்கிய வழக்கம். தீக்ஷை பெற்றபின் நித்திய கருமாநுஷ்டானங்களைத் தவறாமல் செய்து வருகின்றார்கள். ஸ்தல யாத்திரை செய்வதில் ஆண்மக்களும் பெண்மணிகளும் மிக்க சிரத்தையுடையவர்கள். சிவநேயத்தையே பெருஞ்செல்வமாகக்கொண்டவர்கள், தமிழ் நாட்டு மூவேந்தர்களால் ஆக்கப் பெற்ற எண்ணிறந்த சிவாலயங்களைப் புதுக்கி முன்னிலும் சிறக்கப் பல லக்ஷக்கணக்கான பொருட்செலவிட்டு நடத்திவருகின்றனர். இவ்வகுப்பினர் இத்தருமத்தைக்கைக்கொள்ளாவிடின் இதுவரை எத்தனையோ ஆலயங்கள் இருந்த இடந்தெரியாமற்போயிருக்கும். இவர்கள் செய்துவரும் இப்பெரும் புண்ணியத்தை நேரிலறிந்த சேது சம்ஸ்தான மன்னர் பெருமானும், பெரும் புகழ்பெற்ற பேரறிவாளரும் ஆகியிருந்த ஸ்ரீமத் பாஸ்கர சேதுபதி மஹா ராஜா அவர்கள் திருவாடானைக் கும்பாபிஷேக காலத்தில் அங்குக்கூடிய பல்லாயிரம் ஜனங்களிடையே பேசிய விஷயமொன்றை யிங்கே கூறுவது மிகையாகாது. அதாவது.—"முற்காலத்தே அரசர்கள் பலரும் ஆலயத்திருப்பணித் தருமத்தை மிக்க சிரத்தையுடன் செய்து வந்தனர். பிற்காலத்தே தமிழரசரில்லாமையால் இப்புண்ணியத்தைக் கவனிப்பாரிலராயினர். இறைவனருளால் பண்டையரசர்கட்குப் பிரதிநிதிகளாகத் தோன்றிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களே இத்தருமத்தைக் கைக்கொள்பவராயினர். இதனால் இக்காலத்தில் இவர்கள்தாம் தமிழ்வேந்தர்களென்று நாம் கருதவேண்டும். இப்படிக் கருதுவதற்கு ஆதாரங்களுமுள்ளன. இவ்வகுப்பினர் பெயர் நாட்டுக்கோட்டை நகரத்தார் என்பதாதலின் நாடு, கோட்டை, நகர் ஆகிய மூன்றும் யாருக்கு உரியனவென்று கவனித்தால் அரசர்கட்கே

யுரியனவென்பது புலனாகும். ஆகவே இவர்கள்தாம் தற்காலத்துத் தமிழ் வேந்தர்கள் என்பது யாவரும் ஒப்பத்தக்கதொன்றேயாம்" என்று மனதாரப் புகழ்ந்து பேசினார்கள். இவ்வைசிய மணிகள் தாம் மேற்கொண்டுள்ள ஆலயத்திருப்பணி விசேடத்தாலன்றோ ஒரு பெரிய சம்ஸ்தானாதிபதி யவர்கள் திருவாக்கால் பெருஞ்சபையில் பெரும்புகழ்பெற நேர்ந்தது? தங்கள் கோத்திரப் பெயரை யமைத்துக் கொள்ளும்போதே தாங்கள் சென்று வணங்கும் ஆலயத்தின் பெயரே கோத்திரப் பெயராகக் கொண்டு இன்ன கோயிலார் எனக் கூறுவது இவர்கள் வழக்கம். இதனாலும் இவர்களுள்ளத்தே ஆலயவழிபாடு வேரூன்றிப் பதிந்திருத்தலை நன்கு காணலாம். இங்ஙனம் கல்வி யறி வொழுக்கங்களாற் சிறந்து விளங்கும் பெரியோர்களெல்லாம் புகழ்ந்து பாராட்டும் இவர்களது ஆலயத்திருப்பணிப் புண்ணியத்தைப்பற்றித் தற்காலத்துக் கற்றுக்குட்டிச்சாமியார்களா குறைகூறவல்லுநர்?

(3) தேசாபிமானம்:—ஒவ்வொருவரும் தாம் வசிக்குந் தேசத்தின்மீது அபிமானங்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இந்த விஷயத்திலும் இவ்வகுப்பினர் சிறந்தவர்களேயாவர், சோணாட்டில் வசிப்பதை விட்டபோதும் எல்லாரும் ஒரே மனத்துடன் புறப்பட்டனர். எல்லோருமே பாண்டிநாட்டை யடைந்தனர். பாண்டிநாட்டுள்ளும் வட கீழ்த்திசையில் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு எல்லாருமே வசிக்கின்றனர். இவ்வாறு தாம் வசிக்கும் பாகத்தின் மீது முதலிற்கொண்ட அபிமானமானது வரவர விரியத்தலைப்பட்டது. தற்போது நெட்டாலில் போய் இடுக்கியில் அகப்பட்ட எலியைப்போன்று வருந்தித்துடிக்கும் நம்மவர்களின் கஷ்டநிலைமைப் பத்திரிகை வாயிலாக அறிந்து தக்கவாறு பொருளனுப்பிவருகின்றனர். சமீபத்தில் தேவகோட்டை வைசிய சிவாநந்த சபையில் ஸ்ரீமாந் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள் தலைமை வகித்து இவ்விஷயத்தைப்பற்றி யுபந்யசித்து அங்குக்கூடிய வைசிய மணிகளிடம் பொருள் சேர்த்தனுப்பியதும், மேலைச்சிவபுரிச்சன்மார்க்கசபையில் ஸ்ரீமத் மு. சின்னையா செட்டியாரவர்கள் இவ்விஷயத்தை யுபந்யசித்துப் பொருள் சேர்த்தனுப்பியதும், ஆத்தங்குடி முதலிய பல நகரங்களிலுள்ள வைசிய மணிகள் பொருள் சேர்த்

தனுப்பியதும், பர்மா முதலிய தேசங்களில் வர்த்தகத்தின் பொருட்டுச் சென்றிருக்கும் வைசியமணிகள் வைசியமித்திரன் பத்திராதிபரவர்களாற் றூண்டப்பட்டுப் பொருள் சேர்த்தனுப்பியதும் இவ்வகுப்புப் பெண்மணிகள் தாங்களாகவே இதன் பொருட்டுப்பொருள் சேர்த்தனுப்பியதும், பிறவும் பிரசித்தமேயாம்.

(4) பாஷாபிமானம்:—தமது தாய்மொழியாகிய தமிழ்ப் பாஷையினிடத்து அன்பும் ஆதரவும் இவ்வகுப்பினர் யாவரிடத்துங் காணலாம். முற்காலதற்கால வித்துவான்களை யாதரித்துப் பல்லாயிரக்கணக்கான பெரும்பொருள் கொடுத்துவருகின்றார்கள். அநேக தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளியிடச் செய்துள்ளார்கள். தாங்களும் தக்கவித்துவான்களையுடன்வைத்து நன்கு கற்றுத்தேர்ச்சி யுறுகின்றார்கள். இவ்வகுப்பினர்களில் தமிழ் இலக்கிய இலக்கண சாஸ்திர முதலிய நூல்களை முறையாகக் கற்று வல்ல பண்டித மணிகள் பலருண்டு. இப்போதுள்ளவர்களில் சிலரைப்பற்றிக் கூறுதும். அமராவதி புதூர் ஸ்ரீமாந் வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியாரவர்கள் தமிழ் நூற்பயிற்சி மிகக்கொண்டு தேறியதுடன் குன்றக்குடி முருகர் கலம்பகம் மதுரைத்திரிபந்தாதி முதலிய நூல்களைச் செய்துள்ளார்கள். இவர்கள் வாக்கு மிக மதுரமாகவும், சொற்பொலிவும், பொருட்சிறப்பும் கொண்டு சங்க நூல்களைப் போன்றதாக விளங்குவது பலருமறிவர். அன்றியும் இவர்கள்புலான் மறுத்தல் விஷயமாகச்செய்த இரண்டு பதிகங்களை வியவாதாரிலர். இவ்விஷயத்தைப்பற்றி இவர்கள் பல சபைகளில் யாவரும் வியக்கத்தக்கவாறு உபந்யசித்து வந்தமையால் பல்லாயிரம் ஜனங்கள் மாமிச போஜனத்தையே அடியோடுவிட்டுப் புனிதராயினர்கள். காரைக்குடி ஸ்ரீமாந் சொக்கலிங்கய்யா அவர்கள் பற்பல புராணங்களும் பிறவும் செய்துள்ளார்கள். தேவகோட்டை ஸ்ரீமாந் அரு. அரு. சோம. அருணசலஞ் செட்டியாரவர்கள் தமது அதி பால்யப்பருவமுதற்கொண்டே நன்கு கல்வியயின்று வருவதுடன் பெருஞ்சபைகளில் சென்று பக்திச்சுவை தோன்ற உபந்யசித்து வருகின்றார்கள்.

பகிபாலன்பட்டி ஸ்ரீமாந் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் தமிழும் சமஸ்கிருதமும் நன்குகற்று "யான் பெற்ற இன்பம் பெறுகவிவ்வை

நாட்டுக்கோட்டையாரைப்பற்றிய சில விசேடக்குறிப்புக்கள். கடுந
யகம்'' என்ற பெரியார் திருவாக்கின்படி தம் ஜாதியார் அனைவருமே கல்வி நிரம்பப் பெறவேண்டுமென்று கருதி நகரத்தார் வசிக்கும் எத்தனையோ நகரங்களிற் சென்று கலாசாலைகளையும் சபைகளையும் ஸ்தாபித்து அரிய பெரிய உபந்யாசங்கள் புரிந்து வருகின்றார்கள். இவர்களது நன் முயற்சியால் முதலில் மேலைச்சிவப்பட்டியில் ஸ்ரீமாந் வ. பழ. சா. பழநியப்ப செட்டியாரவர்களின் தலைமையில் சன்மார்க்க சபை தோன்றி நன்கு பரிபாலிக்கப் பெற்று வந்து இப்பொழுதும் ஷியார் சகோதரர் ஸ்ரீமாந் வ. பழ. சா. அண்ணாமலைச்செட்டியாரவர்களால் நன்கு பரிபாலிக்கப் பெற்றுவருகின்றது. பின்னர் வலயபட்டி, கூழிபிறை, கோனாபட்டு, சொக்கலிங்கம்புதூர், ஆத்தங்குடி, கண்டனூர், நேமத்தான்பட்டி, பள்ளத்தூர், நாச்சியாபுரம், கண்டமாணிக்கம், காரைக்குடி, தேவகோட்டை, சண்முகநாதபுரம், பலவான்குடி, அரியக்குடி முதலிய பற்பல நகரங்களில் கலாசாலைகளும், சபைகளும், புத்தகசாலைகளும், வாசகசாலைகளும் ஆங்காங்கு வசிக்கும் நகரத்தார்களால் ஸ்தாபிக்கப் பெற்று நன்கு நடைபெறுகின்றன. சபை கூடுங்காலங்களில் ஆண்மக்களைப்போலவே பெண்மக்களும் திரள்திரளாக வந்து இருந்து அமைதியாக உபந்யாசசிரவணானந்த மெய்துகின்றனர். வியாபார நிமித்தம் இன்னவர் சென்றுறையும் இரங்கோன் பினாங்கு கொழும்பு முதலிய அயல்நாடுகளிலும் கலாசாலைகளையும் சபைகளையும் ஏற்படுத்திப் பரிபாலிக்கின்றனர். சமீபத்தில் ரங்கோன் ஆறறை மாடியில் கூடிய பெருஞ் சபையில் இவ்வகுப்பினரின் இளஞ்சிறார்கள் பேசியதும், சில கனவான்கள் உபந்யசித்ததும், ஸ்ரீமாந் சா. அ. அருணாசலஞ் செட்டியாரவர்கள் கல்வியபிவிர்த்தி விஷயமாக மிக்க ஊக்கத்துடன் பொருட்பொருத்தம் நன்கு நிரம்பப்பேசியதும் பத்திரிகை நேயர்கள் பலரும் அறிந்தனவேயாம். கானாடுகாத்தான் ஸ்ரீமாந் திவான் பகதூர் சா. ராம. மு. இராமசாமிச்செட்டியாரவர்கள் எத்தனையோ அரிய பெரிய உபந்யாசங்களைப் பலமுறை செய்துள்ளார்கள். கண்டனூர் ஸ்ரீமாந் தெ. அரு. சித. இராமநாதன் செட்டியாரவர்கள், ஸ்ரீமாந் மு. ராம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் முதலிய பலர் பெருஞ்சபைகளில் நூன்முறை கடவாது உபந்யாசங்கள் செய்து வருவதும் அறியாதார் யாவர்? ஆ. தெற்கூர்

ஸ்ரீமாந் கரு. முத்து. அழகப்பசெட்டியாரவர்கள் கோனுபட்டுச் சபை முதலிய பல சபைகளில்உபந்யாசகராகவும், அக்கிராசனராக வுமிருந்து சபை மகிழ விஷயங்களை யெடுத்துப்பேசி வந்திருக்கிறார் கள். கோட்டையூர் வாசியாகிய ஸ்ரீமாந் சோமசுந்தரஞ் செட்டி யாரவர்கள் அதிமதுரமான சிலேடைப் பொருளமைத்து ஆசு கவி பாடுவதில் பிரசித்தி பெற்றுள்ளார்கள். மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபைக் காரியதரிசியாகிய ஸ்ரீமாந் கும. மு. குமரப்ப செட்டியாரவர் கள் தெய்வபக்தி தோன்ற இனிமையாகப் புராணப்பிரசங்கம் புரி கின்றார்கள். இன்னும் இவ்வகுப்பினரிற் பலர் தக்க உபந்யாசகரா கவும் அக்கிராசனராகவும் சபைகளிற்சென்று புகழ்ப்பெறுகின்ற னர். கொத்தமங்கலம் நகரத்தார்கள் எப்பொழுதும் ஒரு வித்து வானைத் தம் நகரில் வைத்துப் புராணப்பிரசங்கஞ் செய்வித்துத் தக்க பொருளுதவி ஆதரித்து வருகின்றார்கள்.

மேலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு தேவிகோட்டை ஜமீந் தார் ஸ்ரீமாந் அள. அரு. ராம. அருணசலஞ் செட்டியாரவர்கள் பெரும் பொருளுதவினார்கள். தேவிகோட்டை மெ. வகையாரும் தக்கவாறு பொருள் உதவினார்கள். தற்போது இத்தமிழ்ச்சங்கம் உபாக்கிராசனாதிபதியாயிருப்பவர்கள் கானாடு காத்தான் ஸ்ரீமாந் சா ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களே. இவர்கள் ஒருசமயத் தில் ஆயிர ரூபா நன்கொடை கொடுத்ததுடன் மாசம் ஐம்பது ரூபா வீதம் இற்றைக்குங் கொடுத்து வருகிறார்கள். அன்றியும் இவர்கள் தேவகோட்டைக்குச் சென்றபோது அந்நகரத்து ஸ்ரீமாந் ராம. மெ. சித. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், ஸ்ரீமாந் அரு. அரு. சோம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், ஸ்ரீமாந் ராம. அரு. அரு. ராம. அருணசலஞ் செட்டியாரவர்கள், ஸ்ரீமாந் மெ. அரு. கா. இராமநாதன் செட்டியாரவர்கள், ஸ்ரீமாந் மெ. அரு. அரு. அரு ணசலஞ் செட்டியாரவர்கள். ஸ்ரீமாந் மெ. லெ. மெ. இராமநாதன் செட்டியாரவர்கள் ஆகிய இவர்கள் சுமார் எண்ணாயிர ரூபாவரை தமி ழ்ச்சங்கத்துக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆ. தெற்கூர் ஸ்ரீமாந் கரு. முத்து அருணசலஞ் செட்டியாரவர்களும் அவர்கள் சகோத ரர்களும் வருகிற தமிழ் வித்துவான்களை யெல்லாம் ஆதரித்து வரு வதுடன் தமிழ்ச்சங்கத்துக்கும் ஆயிரக்கணக்கான கொடை கொ

த்திருக்கின்றார்கள். முறையூர் ஸ்ரீமாந் பழ. சி. சண்முகஞ் செட்டியாரவர்கள் எப்பொழுதும் வித்துவான் கட்குக் கொடுத்துவருவது வழக்கமாகக் கொண்டிருப்பதுடன் தமிழ்ச்சங்கத்துக்குப் பெரும் பொருள்கொடுத்துள்ளார்கள். இன்னும் கொடுக்கக் கருதியிருக்கிறார்கள். மற்றும் நகரத்தார்களிற் பல கனவான்கள் தமிழ்ச்சங்கத்துக்கு உதவி புரிந்துள்ளார்கள்.

திரட்டிச் சொல்லுமிடத்து தற்காலம் நமது தமிழ் மொழியைப் பரிபாலித்து வருபவர் நாட்டுக்கோட்டையார்களென்றே கருதலாம். ஆகமங்களைத் தமிழில் மொழி பெயர்த்துப் பரப்புதற்காகத் தேவகோட்டை மெ. வகையார் 20000 ரூபா தொகுத்து வைத்துள்ளார்கள். அன்றியும் சங்கீதத்திலும் நல்ல தேர்ச்சி யுடையார் பலருண்டு. பிடில் சுரபத்து புல்லாங்குழல் முதலிய இசைக்கருவிகளைக் கொண்டு இன்னிசை மழை பொழிவித்துச் சபையை மகிழ்விப்பவரும் சிலர் இருக்கின்றனர். தேவகோட்டை ஜமீந்தார் ஸ்ரீமாந். அள. அரு. ராம. அருணசலஞ்செட்டியாரவர்கள் சுரபத்து வாசிப்பதில் மிகத் தேர்ச்சியுடையவர்களென்பது பல சங்கீத வித்துவான்களே ஒத்துக்கொண்ட விஷயம். கீழைச் சிவப்பட்டி ஸ்ரீமாந் காசிச்செட்டியாரவர்கள் மிகப் பெரிய சபைகளிற்சென்று புல்லாங்குழல்வாசிப்பதில் பிரசித்தி பெற்று வருகின்றார். வயித்திய சோதிடாதி நூல்களில் தேர்ந்தவர்களும் பலரிருக்கின்றனர். தற்காலத்துக்கு அவசியம் வேண்டியதாகிய ஆங்கிலக்கல்வியின் அபிவிர்த்தி கருதி காரைக்குடியில் ஒரு கலாசாலை ஸ்தாபிப்பதற்காக அவ்வூர் ஸ்ரீமாந் முத்த. வெ. வெள்ளையன் செட்டியாரவர்கள் 15000 பதினையாயிரம் ரூபா நன்கொடை யளித்துள்ளார். மற்றும் அவ்வூர் வணிகமணிகள் பலரும் தக்கவாறு பொருளுதவி செய்துள்ளார்கள். இவர்கள் பொருளுதவியால் மீனாக்ஷிசுந்தர வித்தியாசாலை என்ற பெயருடன் அமைந்த கலாசாலையில் ஆங்கிலமுந் தமிழும் நன்கு கற்று வல்ல போதகாசிரியர்களைக் கொண்டு கற்பித்து வருவதுடன் நிலையாக நடந்து வருதற்கேற்றவாறு தீர்க்காலோசனை கொண்டு வேண்டிய சட்டதிட்டங்களையும் ஏற்படுத்தி யிருக்கின்றார்கள்.

(5) ராஜவிசுவாசம்:—"அனைவோர்க்குந்தெய்வம் இலைமுகப் பைம்பூண் இறை" எனவும் "திருவுடை மன்னரைக் காணிற் திரு

மாலைக் கண்டேனே யென்னும்'' எனவும், அரசனைத் தெய்வமாகக் கருதும் ராசபக்தி கொண்டுள்ள நமது முன்னோர்களைப்போலவே இவ்வகுப்பினரும் ராஜபக்தி பெரிதுமுள்ளவர்கள். இவருள் ராஜத்துவேஷ மென்பது சிறிதும் கிடையாது. ஸ்ரீமாந். சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்கள் "ராஜ விசுவாசம்'' என்ற தலைப் பெயருள்ளதொரு புத்தகம் தமிழிலும் ஆங்கிலத்திலும் லட்சம் பிரதிகள் அச்சிட்டு நம்மவர் பலர்க்கும் இலவசமாகக்கொடுத்து எல்லாருள்ளத்தும் ராஜவிசுவாசம் நிலைபெறச்செய்தார்கள். ஸ்ரீமாந். மு. சின்னையாசெட்டியாரவர்கள் தேவகோட்டை வைசிய சிவாநந்த சபையில் கனம் டிப்டிகலெக்டரவர்கள் அக்கிராசனத்தில் "ராஜ விசுவாசம்'' என்றதொரு சிறந்த உபந்யாசம் செய்தார்கள். மற்றும் பல சபைகளில் மிக அருமையாக உபந்யசித்துள்ளார்கள். நம்மையெல்லாம் ஜாதி மத பேதங் கருதாது நீதியரசாட்சி புரியும் காருண்ய மிக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடத்து மிக்க விசுவாசம் பூண்டுள்ள ஸ்ரீமாந். வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியாரவர்கள் "முடிசூட்டு மங்கலம்'' என்ற நூல்பாடி ஆங்கில மொழி பெயர்ப்பும் அழகிய பலபடங்களும் சேர்த்து அச்சிட்டுப் பலர்க்கும் கொடுத்துள்ளார்கள். இவ்வகுப்பினர் எல்லாருமே ராஜபக்தியிற் சிறந்தவர்களென்பது நிச்சயம். கடியாபட்டி ஸ்ரீமாந்களாகிய தீ. சொ. விலாசத்தார் புதுக்கோட்டை சம்ஸ்தானத்தில் செய்வித்த மிகச் சிறந்த தண்ணீர்த்தொட்டி முதலிய பேர்றச் செயல்களும் இவர்களது ராஜபக்தியையே நன்கு விளக்குவனவாம்.

(6) பொருளீட்டல்:—"திரைகட லோடியுந் திரவியந் தேடு'' என்ற முதுமொழியைப் பின் பற்றி விடாமுயற்சியுடன் கடல் கடந்து சென்று வர்த்தகஞ் செய்து பொருளீட்டுவதில் இவ் வகுப்பினரே ஒப்பாரு மிக்காரு மிலாதவர். "காணி காணியாகத் தேடிக் கோடி கோடியாகக் கொடு'' என்ற பழமொழிப்படியே ஈட்டும் பொழுது இம்மியும் விடாது பொருள் சேர்ப்பதும், கொடுக்கும் பொழுது பொருளைத் துரும்பாக நினைத்து நூற்றுக் கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும், லட்சக் கணக்காகவும் கொடுப்பதும் இவ்வகுப்பினரிடத்தே நன்கு காணலாம்.

7) தருமம்:—அன்ன சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், தடாகங்கள், நந்தனவனங்கள், பசுமடங்கள், வேதபாடசாலைகள், ஆகம பாடசாலைகள், தேவாரபாடசாலைகள் முதலிய எத்தனையோ தருமஸ்தாபனங்களைச் செய்து வருகிறார்கள். தங்கள் தங்கள் வருவாயில் தருமத்திற்கென்று ஒரு பாகம் எடுத்து வைத்தும் அதை அபிவிர்த்தி செய்தும் தக்க வகையில் உபயோகப்படுத்தியும் வருபவர்கள் இவ்வகுப்பினரைத் தவிர வேறு யாரும் இல்லையென்றே சொல்லலாம். யாசகர்கட்குக் கொடுப்பதில் சலியாதவர்கள் இவ்வகுப்பினரே. காரைக்குடியில் தருமச் செயலை அன்புடன் புரிந்து வந்தது பற்றி ஒரு கனவான் தர்ம நாராயண செட்டியா ரென்று உலகத்தாரால் புகழ்ப்பெற் றிருக்கின்றார். கன்னிகாதானம், பூதானம், கோதானம், சொன்னதானம், வஸ்திரதானமாதிய பலவகைத்தானங்களையும் இப்பொழுதும் செய்து வருகின்றவர்கள் இவர்களே.

(8) சத்தியம்:—சத்தியமொழிப்பாதுகாப்பு இவர்க்குள் மிகுதியாகக் காணலாம். பேச்சளவில் லட்சக்கணக்கான பொருள் வாங்குவதும் கொடுப்பதும் இவர்களிடம் உண்டு. இவர்களுக்குள் ஒரு கடன்காரன்தான் கெட்டாலும் தஸ்தவேசு, காலாவதி என்றவற்றைக் கருதாது அவன் சந்ததியார்கள் முன்னோர் கொண்ட கடனைத் தீர்த்தாலன்றி மதிப்படையான். அங்ஙனம் தீர்ப்பதில் யாரும் பின்னிடுவதில்லை. இக்குணம் ஏனையரிடம் காண்பதரிது.

(9) மானம்:—"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா னன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்" என்ற பொய்யில் புலவர் திருவாக்கின்படி மானத்தைப் பேணுதல் இவர்களிடம் மிகுதியாக வுண்டு. ஒருவன் குற்றவாளி யெனப்பட்டு விலங்கிடப்படுவானாயின் அவன் அதுமுதல் தன் குடும்பத்தின் சகல உரிமைகளையும் இழந்து பிரஷ்டனாக வேண்டுமென்றவிதி இவர்களிடந்தான் காணப்படுகின்றது. மேலும் இவ்வகுப்பினர் எவ்வளவு வறியராயினும் தம் இனத்தாரிடத்தன்றி ஏனையரிடம் சம்பளம்பெற்றுப்பணி செய்யக்காண்பதரிது. "தாவாத செல்வந் தருமெனினுங் குற்றேவல், ஆவா கொடிது கொடிது" என்பதை மேற்கொண்டவர்களிவ்வகுப்பினரே யாவர். இவற்றால் இவ்வகுப்பினர் மானத்தை எவ்வளவு பெரிதாக மதித்துள்ளார்க ளென்பது தெளிவாம்.

(10) உற்றுழியுதவல்:—தமது சுற்றத்தாருள் யாராவது வர்த்தக முறையில் நஷ்டமடைந்தால் அவருக்கு வேண்டும் பொருளுதவி செய்து பின்னும் தொழில் நடத்துமாறு ஊக்க மூட்டி யுயர்த்துவதும், மற்றும் வேண்டு முதவிகளை யெல்லாம் செய்வதும் இவ்வகுப்பினரிடம் கண்கூடாகக் காணத்தக்க செய்கைகளேயாம்.

(11) நாகரீகம்:—இவ்வகுப்பினரிற் பலர் நாகரீக முதிர்ச்சியுற்றவர்களாகின்றார்கள். ஆங்கிலங் கற்று வருகின்றார்கள். ஆ. தெற்கூர் ஸ்ரீமான். கரு. முத்து. அழகப்பசெட்டியாரவர்கள் குமாரர் 18 வயதுள்ள நடராஜச் செட்டியார் கேம்பிரிட்ஜ் ஸீனியர் லோக்கல் பாஸ் செய்திருக்கிறார். இவரது சிறிய தந்தையாகிய ஸ்ரீமாந். இராமசாமிச் செட்டியாரவர்கள் தாம் முதன்முதல் சீமைக்கு (லண்டனுக்கு)ப் போய் வந்தவர். கானடுகாத்தான் ஸ்ரீமாந். ராவ்பகதூர்சா. ராம. மு. அண்ணாமலை செட்டியாரவர்கள், ஸ்ரீமாந். சா. ராம. மு. சித. முத்தய்யாசெட்டியாரவர்கள், கோட்டையூர் ஸ்ரீமாந் அழகப்ப செட்டியாரவர்கள் முதலியோரும் சீமைக்கு (லண்டனுக்கு)ப் போய்வந்தவர்கள். ஸ்ரீமாந். ராவ்பகதூர் சா. ராம. மு அண்ணாமலை செட்டியாரவர்கள் பர்மா தேசத்துக்குப் போய் அனேக சபைகளில் அக்கிராசனம் வகித்தும் உபந்யாசங்கள் செய்தும் பல நன்மைகளைச் செய்தும் வந்திருக்கிறார்கள். இவ்வகுப்பினருள் பலர் பலஇடங்களில் ரோட்டுகள், பாலங்கள், ஆஸ்பத்திரிகள், தண்ணீர்க் குழாய்கள், தண்ணீர்த தொட்டிகள் முதலிய பொதுத் தருமங்கட்குப் பெரும் பொருளுதவி யிருக்கிறார்கள். சிதம்பரத்தில் தண்ணீர்த் தொட்டித் தருமத்திற்காக கானடுகாத்தான் ஸ்ரீமான் திவான்பகதூர் சா. ராம. மு. ராமசாமிச் செட்டியாரவர்கள் லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா வரை யுதவி செய்த கனவான் என்பதை யாவரே யறியார்? இவ்வகுப் பினருட் பலர் யூனியன் மெம்பர், யூனியன்சேர்மேன், தாலூகா போர்டுமெம்பர், டிஸ்திரிக்டு போர்டுமெம்பர், தேவஸ்தானக் கமிட்டிமெம்பர், முதலிய ஸ்தானங்களை வகித்துத் தேசநன்மைகளைச் செய்து வருகிறார்கள். இம்மட்டோ! சட்ட நிரூபண ஸ்தானத்தையும் வகித்து வருகின்றார்கள். மேற்கூறிய ஸ்ரீமாந். சா. ராம. மு. ராமசாமி செட்டியாரவர்களே முதலில் சட்ட நிரூபண சபை மெம்பராகி ஆனரபிள் பட்டம் பெற்றார்கள். இப்பொழுதும் கள்ளிக்கோட்டை ஸ்ரீமாந். பெரி. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் சட்ட நிரூபண சபை மெம்பர் ஸ்தானம் வகித்து ஆனரபிள் பட்டம் பெற்றிருக்கின்றார்கள். மேற்குறித்த கனவான்களில் அநேகர் கனம் பொருந்திய சென்னைக் கவர்னர் அவர்கள் பேட்டியும், கனம் இராஜப் பிரதிநிதியவர்கள் பேட்டியும் மிக்க மரியாதையாகப்பெற்றிருக்கின்றார்கள். சமீபத்தில் கனம் சென்னைக் கவர்னர் அவர்கள் மதுரைக்கு விஜயஞ் செய்தபோது அமெரிக்கன் மிஷன் ஆஸ்பத்திரியைப் பார்வையிட வந்த சமையத்தில் கனம் டாக்டர் வானலன் துரையவர்களால் கனம் கவர்ன ரவர்களுக்குப் பழக்கப் படுத்தப்பெற்ற கனவான்கள் மூவரும் இவ்வகுப்பினரே. இவருள் முதனில் ஆ. தெற்கூர் ஸ்ரீமாந். கரு. முத்து. தியாகராஜச் செட்டியாரவர்களைப் பற்றி டாக்டர் துரையவர்கள் கனம் கவர்ன ரவர்களிடத்தில் சொல்லும்போது ,,பலஇடங்களில் ரோட்டுப் போட்டிருக்கிறார்கள்,

அழகிய பாலங்கள்கட்டி யிருக்கின்றார்கள், ஆஸ்பத்திரிகட்குப் பெரும் பொருளுதவி யிருக்கின்றார்கள், ஸ்கூல்களுக்குத் தக்க உதவிசெய்திருக்கிறார்கள், கொழும்பில் பெரிய வியாபாரமுள்ளவர்கள், இவர்களைமிக்க மகிழ்ச்சியுடன் அறிமுகப் படுத்துகிறேன்'' என்று சொல்லி ஒரு சிறந்த மாலையைக் கனம் கவர்ன ரவர்களுக்கு அணியச்செய்தனர். கனம் கவர்னரவர்களும் சிறிது நேரம் கனம். தியாகராஜ செட்டியாரவர்களிடம் வார்த்தைபேசினர். பின்னர் அவண் பக்கத்திலிருந்த கண்டனூர் மாணிக்கம் ஸ்ரீமாந் செ. சி. நா. இலக்குமணச்செட்டியாரவர்களைக் காட்டி "இவர்களும் தக்க செல்வமும் தருமமுங் கொண்டுள்ள சிறந்த கனவா''னென்று பழக்கப்படுத்தி வைத்தனர். பின்னர் அங்குவந்திருந்த கானாடுகாத்தான் ஸ்ரீமாந் சா. ராம. அரு. ராமசாமி செட்டியாரவர்களைக் காட்டி "இவர்கள் தக்க கனவான், தருமசிந்தையாளர், ஆஸ்பத்திரிக்கு 200 ரூபா பெறுமான சவுளிகளும் 200 ரூபாவும் நன்கொடையாக இதோ வைத்திருக்கிறார்கள்'' என்று காட்டினர். செட்டியாரவர்களும் கவர்னரவர்களுக்கு ஒரு மாலை சூட்டினார்கள். இங்ஙனமே மற்றும் பல வணிகமணிகள் கனம் கவர்னரவர்கள் பேட்டி பெற்றார்கள். இவற்றால் இவ்வகுப்பினர் நாகரீக முதிர்ச்சி பெற்று வருவதை நன்கு தெரியலாம். பொது நன்மையின் பொருட்டுப் பத்திராதிபராகவும் முன் வருகின்றார்கள். தேவகோட்டை வைசியமித்திரன் பத்திரிகை ஸ்ரீமாந். சி. த. இராமநாதன் செட்டியாரவர்களால் நடைபெறுவதேயாம். மற்றும் பற்பல பத்திரிகைகளுக்குப் பொருளுதவி செய்து பாதுகாப்பவர்கள் இவ்வைசிய மணிகளே யாவர்.

(12) ராஜாங்க மதிப்பு:—இவ்வகுப்பினரின் உயர்ந்த தன்மைகளை யறிந்த நமது காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் இவ்வகுப்பினரைச் சட்ட நிரூபண சபை மெம்பராக்கி ஹானரபிள்பட்டத்துக்குரிமை பெறச் செய்தது போலவே மற்றும் பல பட்டங்களைக் கொடுத்து ராஜாங்க மதிப்புக் குரியவர்களாக்கி யிருக்கின்றார்கள். கானாடுகாத்தான் ஸ்ரீமாந். சா. ராம. மு. ராமசாமி செட்டியாரவர்கட்கு திவான்பகதூர் என்றபட்டமும். ஸ்ரீமாந். சா. ராம. மு. அண்ணாமலை செட்டியாரவர்கட்கு ராவ்பகதூர் என்ற பட்டமும் கொடுத்திருக்கிறார்கள். மற்றும் இவ்வகுப்பினர் பலர்க்குக் கவர்ன்மெண்டார் நன்மதிப்புப் பத்திரங் கொடுத்துள்ளார்கள். இன்னும் எத்தனையோ விதமான பெருமதிப்புக்குப் பாத்தியமுடை யவர்கள் இவ் வகுப்பின ரென்பது ராஜாங்கத்தாரும் நன்கறிவர், நமது பொது ஜனங்களும் நன்கறிவர்.

வரவர நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய வைசியமணிகள் எல்லா வகையானும் சிறந்து கடவுள் கருணையையும், ராஜமதிப்பையும், உலகமதிப்பையும் அதிகமாகப் பெற்று வருகின்றார்கள். இன்னணமாகக் கல்வியறிவாதிகளால் மேலு மேலும் சிறந்து மேன்மை

பெற்று வரும் இவ்வகுப்பினரைப் பற்றி யிவ்வளவு தூரம் யாம் எழுதியதில் ஒன்றேனும் முகமனுரையன்று. அவர்களிடமுள்ள உண்மையான உயர்நலங்களில் ஒரு சிலவற்றையே எடுத்து விளக்கினேம்.

இவர்களிடமில்லாத தெய்வபக்தி வேறு யாரிடமிருக்கின்றது? இவர்கள் செய்யாத பேரறங்கள் எவை யிருக்கின்றன? சர்வஜனோபகாரமான தருமங்கள் இவர்களைவிட அதிகமாக யார் செய்திருக்கின்றார்கள்? கூன், குருடு, நொண்டி, சப்பாணி முதலிய தேகவலியற்ற ஏழைகட்குப் பேருதவியாகும்பொருட்டே சிதம்பரம், பழநி, குன்றக்குடி, திருவண்ணாமலை, காசி முதலிய பற்பல புண்ணிய க்ஷேத்திரங்களில் குருபூசைமடங்களும், அன்னதான மடங்களும், சத்திரங்களும் அமைத்துள்ளார்கள். அவைகளில் எத்தனையோ ஏழைகள் சென்று வயிறாரவுண்டு வாயாரவாழ்த்தி வருகின்றார்கள். நாட்டுக்கோட்டையார் நகர கிராமங்கள் தோறும் வருகிற ஏழைகள் யாவரும் தத்தமக்கு வேண்டிய எல்லாவிதவுதவிகளையும் பெறுகின்றார்கள். இவ்வளவுதானே இவர்கள் செய்யக்கூடும். இங்ஙனமன்றி உலகத்திலுள்ள எல்லாக் கூன், குருடு, சப்பாணிகளையும் காப்பாற்ற வேண்டுமாயின் அது மாட்சிதங்கிய நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களால் ஒருக்கால் ஆகக்கூடுமேயன்றி மற்றைய அரசர்களாலாவது பிறராலாவது முடியாதகாரியமன்றோ. இவ்வளவு அரிய பெரிய தரும கைங்கரியங்களை யெல்லாம் இவ்வகுப்பினர் செய்திருப்பது போல வேறு எந்தச்சாதியாராவது செய்தார்களா? செய்கின்றார்களா? இனியாவது செய்வார்களா? இவை யெல்லாம் ஊகித்துணராது இவர்கள்மீது குறை கூறவேண்டுமெனக் கருதிப் பொதுத் தருமங்களில் இவர்கள் ஒன்றுஞ்செய்யவில்லை என்று நாஸ்திக வாக்கியத்தைப் பல்லவியாகக்கொண்டு பலபடப் பிதற்றும் அறிவிலிகளான முழுமக்கட்கு யாம் என் கூறுவது? கோடி சூரியோதயமாயினும் கூகை கண்ணுக்கு ஒளி தோன்றுமா? ஒருவர் செய்த தருமத்தை இல்லையென்று கூறுவது அறக்கொடிய பாவமேயன்றோ?

இனியேனும் இந்த நாட்டுக்கோட்டைநகரத்தார் செய்துவரும் பேரறச்செயல்களை யறியாது குறை கூறிய மந்தமதிகளான போலிப் பண்டிதர்களும் போலிச்சாமியார்களும் வாயடங்கி யொழிவாராக. வைசியமணிகள் செய்யும் நல்லறங்களெல்லாம் மேலு மேலும் செழித்தோங்குமாறு திருவாலவுடையான் திருவருள்புரிக.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,

மதுரை.